26.12.15

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### இயற்கை வேளாண் விழிப்புணர்வு சங்க செயற்குழுக் கூட்டம்

உத்தரமேரூரில், மாவட்ட இயற்கை வேளாண்மை விழிப்புணர்வு சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. சங்கத்தின் மாவட்டத் தலைவர் சோழனூர் மா.ஏழுமலை தலைமை வகித்தார். மாவட்டத் துணைச் செயலாளர்கள் மருதம் க.மாயகிருஷ்ணன், மதூர் பொன்.சண்முகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செயற்குழு உறுப்பினர் மு.பரசுராமன் வரவேற்றார். கூட்டத்தில், தொடர் மழை காரணமாக, உத்தரமேரூர் வட்டத்தில் சுமார் 25 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான விளைநிலங்கள் சேதமடைந்தன. ஆயிரத்துக்கும் அதிகமான கால்நடைகள் உயிரிழந்தன.

பேரழிவைச் சந்தித்த உத்தரமேரூரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் கிடைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வட்டாரச் செயலாளர் மு.மோகன் நன்றி கூறினார்.

### விவசாயிகளுக்கு மண்வள அட்டை

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத்தில் விவசாயிகளுக்கு மண்வள அட்டைகள் வழங்கப்பட்டன. முகாமுக்கு, உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குநர் எம்.பத்மாவதி தலைமை வகித்தார். வாலாஜாபாத் வட்டார வேளாண் உதவி இயக்குநர் ஜி.லதா பானுமதி முன்னிலை வகித்தார்.

முகாமில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 13 வட்டங்களைச் சேர்ந்த 60 விவசாயிகளுக்கு மண்வள அட்டைகளும், பயிற்சிக் கையேடுகளும் வழங்கப்பட்டன. இதில், அம்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் எஸ்.கலியபெருமாள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வேளாண் பொறியில் துறை சார்பில் மானிய விலையில் நெல் நடவு இயந்திரம்**

வேளாண் பொறியியல் துறை சார்பில் மானிய விலையில் வழங்கப்படும் பண்ணைக் கருவிகளைப் பெற்று விவசாயிகள் பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் த.ந.ஹரிஹரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி:

தமிழக அரசின் வேளாண்மை பொறியியல் துறை சார்பில், விவசாயத்திற்கான நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

நிகழாண்டுக்கு, தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிலக்கடலை, மக்காச்சோளம், சூரியகாந்தி, கம்பு உள்ளிட்ட அனைத்து பயிர்களின் விதைகளை விதைப்பதற்கான கருவி மானிய விலையில் வழங்கப்பட உள்ளது.

அதேபோல், நெல் நாற்றுநடும் இயந்திரம் (8 வரிசைக்கும் கூடுதலாக) மற்றும் பல்வகை பயிர் கதிரடிக்கும் இயந்திரம் உள்ளிட்ட கருவிகளும் உள்ளன. இந்த கருவிகளை மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள விரும்பும் விவசாயிகள், அந்தந்த பகுதியில் உள்ள வேளாண் பொறியியல் துறை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.

திண்டுக்கல் உதவி செயற்பொறியாளரை 0451-2423758 என்ற எண்ணிலும், பழனி உதவி செயற்பொறியாளரை 04545-245602 என்ற எண்ணிலும், கொடைக்கானலுக்கு 04542-245376 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு கூடுதல் விவரங்களை பெற்றுக் கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

**வைகை அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு**

வைகை அணையிலிருந்து மதுரை மாவட்ட பாசனத்துக்காக வியாழக்கிழமை காலை முதல் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் ஓரளவு பருவ மழை பெய்ததையடுத்து வைகை அணையின் நீர் மட்டம் அதிகரித்து வந்தது. இதனையடுத்து பூர்வீக பாசனப் பகுதிகளான ராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட பகுதி பாசனத்துக்கு கடந்த நவ.29 ஆம் தேதி முதல் தண்ணீர் திறந்து விடப்பட்டு தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் மதுரை மாவட்டம் நிலையூர் பாசன பகுதிகளுக்கு வியாழக்கிழமை 1000 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. மேலும் பெரியாறு கால்வாய் பாசனத்துக்கு 1500 கன அடியும், மதுரை மற்றும் ஆண்டிபட்டி- சேடபட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்துக்கு 60 கன அடி என மொத்தம் 2560 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

அறிவிப்பு வரும் வரை நிலையூர் பகுதிகளுக்கு 1000 கன அடி நீர் திறந்து விடப்படும் என பொதுப் பணித் துறையினர் தெரிவித்தனர்.

சின்னமனூரில் செங்கரும்பு விளைச்சல் அமோகம்: விவசாயிகள் மகிழ்ச்சி

தேனி மாவட்டம் சின்னமனூரில் பயிரிடப்பட்ட செங்கரும்பு நல்ல விளைச்சல் அடைந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

உத்தமபாளையம், சின்னமனூர் பகுதிகளில் 500 ஏக்கருக்கும் மேலாக செங்கரும்பு விவசாயம் நடைபெறுகிறது. இக்கரும்புகள் தை பொங்கல் திருநாளை ஒட்டி அறுவடை செய்யப்படுவது வழக்கம்.

முல்லைப் பெரியாற்று பாசனத்தில் விளைவிக்கப்படும் இக்கரும்பு இயற்கையாகவே அதிக இனிப்புச் சுவை கொண்டது. கரும்பில் சாறும் அதிகமாக இருப்பதால் பொதுமக்கள் அதிகளவில் விரும்பி உண்பார்கள். இதனால், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்ட வியாபாரிகள் தை திருநாளுக்கு முன்னதாக சின்னமனூர் பகுதியில் முகாமிட்டு மொத்தமாக கரும்புகளை கொள்முதல் செய்வார்கள்.

தற்போது, பொங்கல் பண்டிகை நெருங்கிவிட்ட நிலையில், விளைவிக்கப்பட்ட செங்கரும்பு அறுவடைக்கு வந்துவிட்டதால், விவசாயிகளும் விற்பனைக்குத் தயார் நிலையில் உள்ளனர்.

இது குறித்து விவசாயி முருகன் கூறுகையில், ஆண்டுக்கு ஒருமுறை அறுவடை செய்யப்படும் செங்கரும்பு விவசாயத்திற்கு ஏக்கருக்கு ரூ.1.25 லட்சம் வரை செலவாகிறது. இந்த ஆண்டில் பருவமழை எதிர்பார்த்தபடி பெய்த காரணத்தால் தண்ணீர் பற்றாக்குறை இல்லை. இதனால் 8 அடி உயரக் கரும்புகள் நல்ல வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் என்றார்.

**சிவகங்கை மாவட்டத்தில் நாளை கால்நடைகளுக்கான குடற்புழு நீக்க முகாம்**

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் டிசம்பர் 26,27ஆம் தேதிகளில் கறவைப் பசுக்கள், வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கான மருத்துவப் பரிசோதனை, குடற்புழு நீக்க முகாம் நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் சு.மலர்விழி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட கறவைப் பசுக்களின் பால் உற்பத்தி திறனை பெருக்கவும், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் எடையை அதிகரிக்கவும் தமிழகம் முழுவதும் இம்மாதம் 26,27ஆம் தேதிகளில் கறவைப் பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனையும், வெள்ளாடு,செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெற உள்ளது. அனைத்து தரப்பினரும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார் அவர்.

**ராமநாதபுரம் அருகே தோட்டக்கலைக் கண்காட்சி இன்று தொடக்கம்**

ராமநாதபுரம் அருகே அச்சடிப்பிரம்பு கிராமத்தில் தோட்டக்கலைத் துறையின் சார்பில் நடத்தப்படும் கண்காட்சி வெள்ளிக்கிழமை (டிச.25) தொடங்குகிறது.

இக்கிராமத்தில் தோட்டக்கலைத் துறையின் சார்பில் ஐந்திணை மரபணுப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

இப்பூங்காவில் மாவட்டத்திலேயே முதன்முதலாக தோட்டக்கலைக் கண்காட்சி நடத்தப்படுகிறது.

வெள்ளிக்கிழமை தொடங்கும் கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை நிறைவுபெறுகிறது.

தொடக்க விழாவுக்கு ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் க.நந்தகுமார் தலைமை வகிக்கிறார். மக்களவை உறுப்பினர் அ.அன்வர்ராஜா முன்னிலை வகிக்கிறார்.அமைச்சர் எஸ்.சுந்தரராஜ் கண்காட்சியை திறந்து வைத்துப்பேசுகிறார்.

**பொன்னி நெற் பயிரில் குலை நோயைக் கட்டுப்படுத்த யோசனை**

ராமநாதபுரம் மாவட்டத்தில் டீலக்ஸ் பொன்னி என்று அழைக்கப்படும் பி.பி.டி. 5204 நெல் ரகத்தில் குலைநோய் தாக்குதல் அதிகரித்து வருவதைக் கட்டுப்படுத்த வேளாண் உதவி இயக்குநர் ஆர்.ராமசாமிப் பாண்டியன் யோசனைகளைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு விவரம்:

நடப்பு ஆண்டில் ராமநாதபுரம் மாவட்டத்தில் சம்பா பருவத்தில் 6300 எக்டேர் பரப்பில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. பொதிப் பருவத்தில் உள்ள இப்பயிரில் நவம்பர் மற்றும் டிசம்பர் முதல் வாரத்தில் பெய்த கனமழை மற்றும் மேகமூட்டம் காணமாக குலைநோய் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. ராமநாதபுரம் அருகே பேராவூர், தேவிபட்டினம், சம்பை ஆகிய கிராமங்களில் டீலக்ஸ் பொன்னி என்று அழைக்கப்படும் பி.பி.டி. 5204 நெல் ரகத்தில் தான் இந்நோய் தாக்குதல் தெரிகிறது.

நோயின் அறிகுறிகள்: குலைநோய் பயிரின் எந்தப் பருவத்திலும் தாக்கலாம். இலை மேல்பரப்பு, கணு மற்றும் தண்டுப்பகுதிகளில் நீள் வடிவத்தில் கண் வடிவப் புள்ளிகள் காணப்படும். புள்ளியைச் சுற்றி சாம்பல் நிறத்திலும், ஓரத்தில் சிவப்பு நிறத்திலும் காணப்படும். கண் வடிவப் புள்ளிகள் ஒன்றாக இணைந்து இலைமுழுவதும் பரவி இலை காய்ந்தது போலாகி விடும். தூரத்திலிருந்து பார்த்தால் பயிர் எரிந்தது போலத் தெரியும். இலைக் கணுக்கள் கருப்பு நிறமாகி ஒடிந்தது போலத் தெரியும். குலை நோய்த் பூக்கும் பருவத்திலும் கதிரில் உள்ள மணிகளையும் தாக்கும்.

குலைநோயை வராமல் பாதுகாத்தல்: தழைச்சத்தைப் பிரித்து யூரியாவுடன் கலந்து இட வேண்டும். வரப்பில் உள்ள களைச்செடிகளை அகற்ற வேண்டும். நோய்த் தாக்குதல் அதிகமாக இருந்தால்

பூஞ்சாணக்கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை கைத்தெளிப்பான் மூலமாக ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கலாம். மேலும் விபரங்களுக்கு ராமநாதபுரம் தலைமை அரசு மருத்துவமனை எதிர்புறம் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளலாம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பொங்கலூர் பகுதியில் தர்பூசணி சாகுபடி தீவிரம்**

பொங்கலூர் பகுதியில் தர்பூசணி சாகுபடியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தர்பூசணி சாகுபடிக்கு கார்த்திகை பட்டம் சிறந்த தருணம் ஆகும். இந்தப் பருவத்தில் சாகுபடி செய்தால் தை மாதம் முதல் பங்குனி வரை தர்பூசணி அறுவடை செய்யலாம்.

தர்பூசணி தோட்டங்களுக்கே வியாபாரிகள் வந்து தர்பூசணி கொள்முதல் செய்துகொள்வார்கள். இதனால், விவசாயிகளுக்கு சிரமம் இருக்காது.

மணல் கலந்த செம்மண் நிலங்களில் தர்பூசணி நன்கு விளையும். தேவையான மண் வளம், சாகுபடி செலவு குறைவு, குறைந்த தண்ணீர் தேவை போன்ற காரணங்களால் பொங்கலூர் பகுதியில் இந்தப் பருவத்தில் பெரும்பாலான விவசாயிகள் தர்பூசணி சாகுபடியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அதிக நஷ்டம் தராததுடன், இச்சாகுபடிக்கு ஆள்கள் தேவையும் குறைவு என்பதால் தர்பூசணி சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

**கொத்துமல்லிக் கீரை வரத்து அதிகரிப்பு**

பல்லடம் சந்தைக்கு கொத்துமல்லிக் கீரை வரத்து அதிகரித்துள்ளது.

கொத்துமல்லிக் கீரை சாகுபடி செய்த நாளில் இருந்து 45 நாள்களில் அறுவடைக்கு வரும். ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யப்படுகிறது.

குறைந்த நாள்களில் அறுவடைக்கு வரும் கொத்துமல்லி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

கார்த்திகைப் பட்டத்தில் விவசாயிகள் சாகுபடி செய்த கொத்துமல்லிக் கீரை தற்போது அமோக விளைச்சல் கொடுத்துள்ளது. நல்ல விளைச்சல் காரணமாக சந்தைக்கு கொத்துமல்லிக் கீரை வரத்து அதிகரித்துள்ளது. தற்போது ஒரு கட்டு கொத்துமல்லிக் கீரை ரூ. 4-க்கு விற்பனையாகிறது.

இதுகுறித்து விவசாயிகள் கூறியது:

தொடர் மழையால் கடந்த மாதம் கொத்துமல்லிக் கீரை விளைச்சல் பாதிக்கப்பட்டது.

இதனால், ஒரு கட்டு கொத்துமல்லிக் கீரை ரூ. 25-க்கு விற்பனை செய்யப்பட்டது.

இருப்பினும் சாகுபடி செய்யப்பட்டதில் 90 சதவீதம் மழையால் பாழாகி, விவசாயிகளுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது.

தற்போது, கொத்துமல்லி விளைச்சல் நன்றாக உள்ளது. அதேசமயம், விலை குறைந்துள்ளதால், எதிர்பார்த்த வருமானம் கிடைக்கவில்லை என விவசாயிகள் தெரிவித்தனர்.

**விதை வெங்காயத்துக்கு தட்டுப்பாடு**

பல்லடம் பகுதியில் விதை வெங்காயத்துக்கு தட்டுப்பாடு நிலவுவதால், சின்ன வெங்காயம் நடவு செய்யக் காத்திருக்கும் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

பல்லடம், பொங்கலூர், சுல்தான்பேட்டை பகுதியில் வடகிழக்குப் பருவமழை பெய்து வந்ததால் பெரும்பாலான விவசாயிகளால் கார்த்திகைப் பட்டம் துவங்கியதும் வெங்காயம் நடவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. பருவமழைக் காலம் முடிவடைந்த நிலையில், உழவு மற்றும் வெங்காய நடவுப் பணியில் விவசாயிகள் தீவிரமாக

ஈடுபட்டுள்ளனர். ஆண்டுதோறும், வைகாசிப் பட்டத்தில் அறுவடை செய்த வெங்காயத்தை இருப்பு வைத்து நடவுக்குப் பயன்படுத்துவது வழக்கம்.

கடந்தாண்டு சின்ன வெங்காயத்துக்கு நல்ல விலை கிடைத்ததாலும், விலை வீழ்ச்சி அடைந்துவிடும் என்ற அச்சத்தாலும் அறுவடை செய்த வெங்காயத்தை உடனுக்கு உடன் விவசாயிகள் விற்பனை செய்துவிட்டனர். தற்போது சந்தையில் வெங்காயத்திற்கு நல்ல விலை கிடைப்பதாலும், பருவ மழையால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளதாலும் நடப்பு பருவத்தில் வெங்காயம் நடவு செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதனால், விதை வெங்காயத்துக்கான தேவை அதிகரித்து, தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக விதை வெங்காயத்தின் விலையும் உயர்ந்துள்ளது. தற்போது ஒரு கிலோ விதை வெங்காயம் ரூ. 60-க்கு விற்பனையாவதால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து வாவிபாளையம் விவசாயி சோமசுந்தரம் கூறியது:

வெங்காயத்திற்கு நல்ல விலை கிடைப்பது விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளித்தாலும் விதை வெங்காயத்தின் விலையை கேட்கும்போதே அதிர்ச்சி ஏற்படுகிறது. தமிழக அரசு தரமான வெங்காய விதைகளை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக மலிவு விலையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும். இதன் மூலமாக, மக்களுக்கு சில்லரை விற்பனையில் குறைந்த விலைக்கு வெங்காயம் கிடைக்கும் என்றனர்.

**மக்காச்சோளம் சாகுபடியில் அதிக மகசூல் பெற ஆலோசனை**

மக்காச்சோளம் சாகுபடியில் அதிக மகசூல் பெறுவதற்கான தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு வேளாண்மை துறை ஆலோசனை வழங்கி உள்ளது.

பல்லடம், பொங்கலூர், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் பி.ஏ.பி. பாசனத் திட்டத்தில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடி செய்துள்ளனர். இதில், அதிக மகசூல் பெறும் வழிமுறைகள் குறித்து பல்லடம் வேளாண்மை துறையினர் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

மக்காசோளத்தில் கோ- 1, கோ.எச். 5 (எம்) முதலிய ரகங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன. தனியார் நிறுவனங்கள் வழங்கும் வீரிய ஒட்டு ரகங்களும் நல்ல மகசூல் தருகின்றன. வீரிய ஒட்டு ரக விதைகளை ஏக்கருக்கு 6 கிலோ வீதமும், பிற ரகங்களை ஏக்கருக்கு 8 கிலோவும் பயன்படுத்தலாம். விதை மூலம் பரவும் அடிச்சாம்பல் நோயை தடுக்க ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டசிம் அல்லது திரம் பூஞ்சாணக்கொல்லி மருந்து கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து, பிறகு விதைக்க வேண்டும்.

மக்காச்சோளத்தில் துத்தநாக சத்து, மெக்னீசிய சத்து மற்றும் இரும்புச்சத்து குறைபாடு அதிகளவில் காணப்படும். இதனால் மகசூல் பாதிக்கப்படும். இதை தவிர்க்க வேளாண்மை துறை மூலம் விற்கப்படும் சிறுதானிய நுண்ணூட்டக் கலவையை ஏக்கருக்கு 5 கிலோ என்ற அளவில் 15 கிலோ மணலுடன் கலந்து பார்களின் மேல்பகுதியில் விதைப்புக்கு பிறகு சீராக இட வேண்டும். ஒரு செடிக்கும் மற்றொறு செடிக்கும் 20 செ.மீ. இடைவெளியும், பார்களுக்கு இடையே 60 செ.மீ. இடைவெளியும் இருக்க வேண்டும்.

மண் பரிசோதனையின் அடிப்படையில் தழை, மணி, சாம்பல் சத்துக்களை இட வேண்டும். மண் பரிசோதனை செய்ய இயலாத நிலையில் பொதுப் பரிந்துரையின்படி ஏக்கருக்கு, தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை 54:25:20 கிலோ என்ற விகிதத்தில் இட வேண்டும்.

இத்தகைய தொழில்நுட்பம் மூலம் ஏக்கருக்கு 4 ஆயிரம் கிலோ வரை மகசூல் பெறலாம் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**மொடக்குறிச்சியில் ரூ. 1.42 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்**

மொடக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தேங்காய், கொப்பரை ஏலம் வியாழக்கிழமை நடைபெற்றது.

ஏலத்துக்கு, மொடக்குறிச்சி, ஜேடர்பாளையம், சோழசிராமணி, மொளசி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 6 டன் எடையுள்ள 16 ஆயிரத்து 204 தேங்காய்களை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில், அதிகபட்ச விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 15 ஆயிரத்து 400-க்கும், குறைந்தபட்ச விலையாக

ரூ. 13 ஆயிரத்து 600-க்கும், சராசரி விலையாக ரூ. 14 ஆயிரத்து 666-க்கும் என மொத்தம் ரூ. 88 ஆயிரத்துக்கு ஏலம் போனது.

இதேபோல, 56 மூட்டைகளில் ஆயிரத்து 43 கிலோ எடையுள்ள கொப்பரை விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்ச விலையாக கிலோ ரூ. 63.60-க்கும், குறைந்தபட்ச விலை ரூ. 55.60-க்கும், சராசரி விலை ரூ.60-க்கும், இரண்டாம்தரக் கொப்பரை அதிகபட்ச விலை கிலோ ரூ. 56.10-க்கும், குறைந்தபட்ச விலை ரூ. 35.10-க்கும், சராசரி விலை ரூ.40-க்கும் என மொத்தம் ரூ. 54 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது. மொத்தம் ரூ. 1 லட்சத்து 42 ஆயிரம் ரூபாய்க்கு கொள்முதல் நடைபெற்றது.

விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் இன்று தொடக்கம்

தமிழக அரசால் வழங்கப்பட்ட விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற உள்ளது என்று மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வியாழக்கிழமை விடுத்த செய்தி:

தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டத்தில் 2011-2012-ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 775 பயனாளிகளுக்கு ரூ. 4.81 கோடி செலவில் 15 ஆயிரத்து 100 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல் 2012-13-ஆம் ஆண்டில் 4 ஆயிரத்து 246 பயனாளிகளுக்கு ரூ 5.41 கோடி செலவில் 16 ஆயிரத்து 984 ஆடுகளும், 2013-14-ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 866 பயனாளிகளுக்கு ரூ. 5 கோடி செலவில் 15 ஆயிரத்து 464 ஆடுகளும், 2014-15-ஆம் ஆண்டில் 4 ஆயிரத்து 838 பயனாளிகளுக்கு ரூ. 6.38 கோடி செலவில் 19 ஆயிரத்து 352 ஆடுகளும் மற்றும் 2015-16-ஆம் ஆண்டில் 671 பயனாளிகளுக்கு ரூ. 86.55 லட்சம் செலவில் 2 ஆயிரத்து 684 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஆடுகளின் நலனை பாதுகாக்கும் வகையில், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் (டிச. 26, 27) ஈரோடு மாவட்டத்தில் டிசம்பர் 2013 முதல் நவம்பர் 2015 முடிய வழங்கப்பட்ட அனைத்து ஆடுகளுக்கும் இலவசமாக குடற்புழு நீக்க முகாம் நடத்த கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆடுகள் வழங்கப்பட்ட அந்தந்தக் கிராமங்களில் காலையில் குடற்புழு நீக்கம் முகாம் நடத்தப்படும். எனவே அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த பயனாளிகள், முகாமில் தவறாது தங்களது ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்து கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

**வேளாண் துறைக்கு தனி பட்ஜெட் தேவை: ஸ்டாலின் குணசேகரன்**

மத்திய, மாநில அரசுகள் வேளாண் துறைக்கு தனி பட்ஜெட் தாக்கல் செய்ய வேண்டும் என்று ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் வலியுறுத்தியுள்ளார்.

ஈரோடு எக்செல் ஜேசீஸ் சார்பில் ஈரோட்டில் புதன்கிழமை இரவு நடைபெற்ற புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழாவில் அவர் பேசியதாவது:

இந்தியா விவசாய நாடு. இந்தியர்களில் 70 சதவிகிதத்துக்கும் மேல் விவசாயத்தில் முழுமையாக ஈடுபட்டுள்ளனர். ரயில்வே துறைக்கு மக்களவையில் தனிபட்ஜெட் முன் வைக்கப்படுகிறது. அதேபோல இந்தியாவின் மூலத் தொழிலாகவும் முதல் தொழிலாகவும் பெரும்பான்மை மக்கள் ஈடுபடும் தொழிலாகவும் உள்ள விவசாயத் துறைக்கென்று தனி பட்ஜெட் போட வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்.

இஸ்ரேல் விவசாயத்துக்கும் நீர் நிர்வாகத்துக்கும் உலக அளவில் உதாரணமாகத் திகழும் நாடு. நம் நாட்டிலுள்ளது போல் மிகுதியான தண்ணீர் வசதி இல்லாத இஸ்ரேல் விவசாயத்தில் சிறந்து விளங்குவது கண்டு உலகமே வியக்கிறது.

அதேபோல், சின்னஞ்சிறு நாடான பின்லாந்து, தனது புதிய அணுகுமுறையினால் கல்வித் துறையில் உலகத்தையே ஆச்சரியத்தோடு திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. இந்த அனுபவங்களை நாம் படிப்பினையாகக் கொள்ளவேண்டும். எதிர்பார்ப்பில் செய்யப்படும் சேவையில் உயிரோட்டம் இருக்காது. இடைவிடாது செய்யப்படும் சேவையே உண்மையானதாகும் என்றார்.

இந்த ஆண்டின் எக்செல் ஜேசீஸ் தலைவராக பி.சுந்தரமூர்த்தி பதவியேற்றார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஜேசிஐ உதவித் தலைவர் எஸ்.பாலவேலாயுதம், மண்டலத் தலைவர் மைதிலி அரவிந்தன், மண்டல உதவித் தலைவர் ஜி.சுதாகர், எக்செல் ஜேசீஸ் தலைவர் எஸ்.கொற்றவேல் முருகன், முன்னாள் தலைவர் சந்திரசேகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**ரூ. 7.25 லட்சத்துக்கு வெற்றிலை வர்த்தகம்**

அந்தியூர் வெற்றிலைச் சந்தையில் ரூ. 7.25 லட்சத்துக்கு வெற்றிலை வர்த்தகம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அந்தியூரில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் வெற்றிலைச் சந்தை நடைபெறுவது வழக்கம். அந்தியூர், சுற்றுப்புறப் பகுதிகளில் அதிகளவில் விவசாயிகள் வெற்றிலை சாகுபடி செய்துள்ளதால் அறுவடை செய்த வெற்றிலைகளை விற்பனைக்குக் கொண்டு வந்திருந்தனர்.

இதில், பீடா வெற்றிலை கட்டு ஒன்று (100 வெற்றிலை) ரூ. 40 முதல் ரூ.50 வரையிலும், ராசி வெற்றிலை கட்டு ரூ. 70 முதல் ரூ. 110 வரையிலும் விற்பனையானது. மொத்தம் ரூ. 7.25 லட்சத்துக்கு விற்பனையானது.

தற்போது, பனிக்காலம் தொடங்கியதாலும், போதிய தண்ணீர் கிடைப்பதாலும் வெற்றிலை நன்கு வளர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். ஈரோடு, பெருந்துறை, கோபி, கவுந்தப்பாடி, கர்நாடக மாநிலம் மைசூரு, பெங்களூர் பகுதிகளைச் சேர்ந்த மொத்த வியாபாரிகள் வெற்றிலையை வாங்கிச் சென்றனர்.

**டிசம்பர் 30-இல் வேளாண் குறைகேட்புக் கூட்டம்**

ஈரோடு மாவட்டத்தில் வேளாண் குறைகேட்புக் கூட்டம் டிசம்பர் 30-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

ஈரோடு மாவட்ட வேளாண் குறைகேட்புக் கூட்டம் காலை 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்றக் கூட்டரங்கில் நடைபெறவுள்ளது. இதில் காலை 11 முதல் 11.30 மணி வரை

விவசாயிகள் மனு கொடுக்கலாம். 11.30 முதல் 12.30 மணி வரை வேளாண் தொடர்பான தங்களது பகுதி பிரச்னை குறித்து விவசாய சங்கப் பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

**நாளை முதல் கால்நடைகளுக்கான இலவச மருத்துவப் பரிசோதனை முகாம்**

தருமபுரி மாவட்டத்திலுள்ள கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறியாடுகளுக்கான இனப் பெருக்க மருத்துவப் பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் 26, 27 ஆகிய இரு தேதிகளில் அந்தந்தப் பகுதி கால்நடை மருத்துவமனைகளில் நடத்தப்படவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் வெளியிட்ட செய்தி: வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில், தருமபுரி மாவட்டத்தில் 21,830 பயனாளிகளுக்கு 82,828 ஆடுகளும், 800 பயனாளிகளுக்கு 759 பசுக்களும் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

**நாளை முதல் கால்நடைகளுக்கான இலவச மருத்துவப் பரிசோதனை முகாம்**

இவ்வாறு வழங்கப்பட்ட விலையில்லா பசுக்களின் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையிலும், வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகளின் எடையை அதிகரிக்கவும் வரும் 26, 27 ஆகிய இரு தேதிகளில் சிறப்பு இலவச முகாம் நடத்தப்படவுள்ளது.

அந்தந்தப் பகுதி கால்நடை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் நடைபெறும் இந்த முகாமில், விலையில்லா பசுக்கள் மற்றும் ஆடுகளைப் பெற்ற பயனாளிகள் மட்டுமல்லாது, அனைத்து விவசாயிகளும் பங்கேற்றுப் பயனடையலாம்.

தருமபுரி மாவட்டத்திலுள்ள கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறியாடுகளுக்கான இனப் பெருக்க மருத்துவப் பரிசோதனை மற்றும்

குடற்புழு நீக்க முகாம் 26, 27 ஆகிய இரு தேதிகளில் அந்தந்தப் பகுதி கால்நடை மருத்துவமனைகளில் நடத்தப்படவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் வெளியிட்ட செய்தி: வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில், தருமபுரி மாவட்டத்தில் 21,830 பயனாளிகளுக்கு 82,828 ஆடுகளும், 800 பயனாளிகளுக்கு 759 பசுக்களும் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வழங்கப்பட்ட விலையில்லா பசுக்களின் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையிலும், வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகளின் எடையை அதிகரிக்கவும் வரும் 26, 27 ஆகிய இரு தேதிகளில் சிறப்பு இலவச முகாம் நடத்தப்படவுள்ளது.

அந்தந்தப் பகுதி கால்நடை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் நடைபெறும் இந்த முகாமில், விலையில்லா பசுக்கள் மற்றும் ஆடுகளைப் பெற்ற பயனாளிகள் மட்டுமல்லாது, அனைத்து விவசாயிகளும் பங்கேற்றுப் பயனடையலாம்.

**"நுண்ணீர்ப் பாசனம் அமைக்க ரூ.479.17 லட்சம் நிதி ஒதுக்கீடு'**

கரூர் மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்களான பழப்பயிர்கள்,காய்கறிப் பயிர்கள், மூலிகைப் பயிர்கள் ஆகியவற்றுக்கு நுண்ணீர்ப் பாசனம் அமைக்க 855 ஹெக்டேர் பரப்பிற்கு ரூ 479.17 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர் ச.ஜெயந்தி.

தற்போது நீர்நிலைகளில் கிடைக்கக்கூடிய குறைந்த அளவு பாசன நீரைக்கொண்டு கூடுதல் பரப்பில் சாகுபடி மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. பாசன நீர் மேலாண்மைத் திட்டத்தில் சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைக்க மத்திய,மாநில அரசுகள் மூலம் மானியம் வழங்கப்படுகிறது.

கரூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் மத்திய,மாநில அரசுகளின் திட்டத்தின் கீழ் நுண்ணீர்ப் பாசனம் அமைக்க மானியத்துடன் 855 ஹெக்டேர் பரப்புக்கு ரூ 479.17 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 100% மானியத்துடன் நுண்ணீர்ப் பாசனம் அமைக்க 574 ஹெக்டேர் பரப்புக்கு ரூ. 363 லட்சத்தில் வழிகாட்டு நெறிமுறைகள் பெறப்பட்டுள்ளன.

75% மானியத்துடன் 144 ஹெக்டேருக்கு ரூ. 90.84 லட்சம் மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. 100 சத மானியத்துடன் தெளிப்பு நீர் பாசனம் அமைக்க 110 ஹெக்டேருக்கு 20.33 லட்சமும் மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தம் 25.33 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 75% மானியத்துடன் 28 ஹெக்டேருக்கு ரூ.5.00 லட்சம் மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு,குறு விவசாயிகளுக்கு(1 ஹெக்டேர் முதல் 2 ஹெக்டேர் வரை) 100% மானியமும், இதர விவசாயிகளுக்கு (5 ஹெக்டேர் வரையிலும்) 75% மானியமும் வழங்கப்பட உள்ளது.

வறட்சிப் பகுதிகளான அரவக்குறிச்சி மற்றும் க.பரமத்தி வட்டார சிறு, குறு விவசாயிகளுக்கான 100% மானியத்தில் மத்திய,மாநில அரசுகள் தலா 50% வழங்கும். இதர விவசாயிகளுக்கான 75% மானியத்தில் மத்திய அரசு 35% வழங்கும். கரூர், தாந்தோணி,கிருஷ்ணராயபுரம்,குளித்தலை,தோகமலை மற்றும் கடவூர் ஆகிய 6 வட்டார சிறு,குறு விவசாயிகளுக்கான 100% மானியத்தில் மத்திய அரசு 35% தமிழக அரசின் பங்கு 65% மானியம் வழங்கும். இதர விவசாயிகளுக்கான 75% மானியத்தில் மத்திய அரசு 25% தமிழக அரசு 50% வழங்கிடும். இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள சிட்டா, அடங்கல், குடும்ப அடையாள அட்டை மற்றும் ஆதார் அட்டை (நகல்), பாஸ்போர்ட் அளவு போட்டோ 4, சிறு, குறு விவசாயி எனில்

வட்டாட்சியரிடம் சான்று, மண் மற்றும் பாசன நீர் ஆய்வு முடிவுகள் போன்றவற்றுடன் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்களை அணுகி பயன் பெறலாம் என ஆட்சியர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**மாயனூர் கதவணையில் தண்ணீர் தேக்குவதன் மூலம் 60,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது : ஆட்சியர்**

மாயனூர் காவிரி ஆற்றின் குறுக்கே புதிதாக கட்டப்பட்ட கதவணையில் 1.05 டி.எம்.சி. தண்ணீரை தேங்குவதன் மூலம் 60,485 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறுகிறது என்றார் மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி.

மாயனூரில் காவிரி ஆற்றில் குறுக்கே கட்டப்பட்ட கதவணையில் 1.05 டி.எம்.சி தண்ணீர் தேங்கப்பட்டதை புதன்கிழமை மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி பார்வையிட்டார். பின்னர் அவர் கூறியது:

கரூர் விவசாயத்தை பிரதானமாக கொண்ட பகுதியாகும். மழைக் காலம் தவிர மற்ற நாட்களில் விவசாய பணிகளுக்கு போதிய தண்ணீர் வசதி இல்லாமல் இருக்கும். இதை கருத்தில் கொண்டு காவிரி ஆற்றில் தடுப்பணையின் மூலம் தண்ணீர் தேங்கி விவசாயத்திற்கு பயன்படுத்த வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வந்தனர். இதையடுத்து, தமிழக முதல்வர் ஜெயலலிதா மாயனூர் கட்டளை பகுதியில் காவிரி ஆற்றில் தடுப்பணை கட்ட உத்தரவிட்டார்.

இப்பணிகள் முடிக்கப்பட்டு, கடந்தாண்டு முதல் 1.05 டி.எம்.சி தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டு விவசாயிகள் பயன்பெற்று வருகிறார்கள். மேலும், விவசாயத்துக்கு மட்டுமன்றி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தேவையான தண்ணீர் பெற்று பயனடையும் நிலை உருவாகியுள்ளது.

இக்கதவணையின் மூலம் தற்பொழுது தேக்கப்படும் தண்ணீரினை கொண்டு காவிரி ஆயக்கட்டு விவசாயத்திற்காக வடகரை வாய்க்கால்,

தென்கரை வாய்க்கால், கட்டளை மேட்டு வாய்க்கால், புதிய கட்டளை மேட்டு வாய்க்கால், கிருஸ்ணராயபுரம் வாய்க்கால் ஆகிய வாய்க்கால்களின் மூலம் 60 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் நீர் பாசன வசதி பெற்றுள்ளன.

இதன்மூலம் விவசாயிகள் ஆண்டு முழுவதும் விவசாய பணிகளை திட்டமிட்டபடி மேற்கொள்வதால் விவசாய பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பதுடன் வேலைவாய்ப்பும் பெருகுவதால், தனிநபர் பொருளாதாரம் உயர்வதற்கு மிக பயனுள்ளதாக இருந்து வருகிறது.

இக்கதவணையின் மூலம் அமராவதி ஆற்றில் சோமூர் வரை தண்ணீர் பின்நோக்கி நிற்பதால் அமராவதி ஆயக்கட்டு சார்பாக மணவாசி, சோமூர், கட்டளை, ரெங்கநாதபுரம் பகுதிகளில் மணவாசி ஆயக்கட்டை சேர்ந்த 241.17 ஏக்கரும், சோமூர் ஆயக்கட்டை சேர்ந்த 244.35 ஏக்கரும் என 485.52 ஏக்கர் விளை நிலங்கள் நிலத்தடி நீர்மட்டம் உயர்வு காரணமாக கிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகள் மூலம் பாசனவசதி பெற்று வருகின்றன என்றார்.

ஆய்வின்போது காவிரி ஆற்று பாதுகாப்பு கோட்ட உதவி செயற்பொறியாளர் திருவேட்டைசெல்லம், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் மதனகோபால், ஆற்று பாதுகாப்பு கோட்ட உதவி பொறியாளர் சதீஷ் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெள்ளாடு வளர்ப்போருக்கு நோய்த் தடுப்பு குறித்த பயிற்சி**

காரைக்காலில் வெள்ளாடு வளர்ப்பில் ஈடுபடும் கால்நடை விவசாயிகளுக்கு நோய்த் தடுப்பு மேலாண்மை குறித்த ஒரு நாள் பயிற்சி வியாழக்கிழமை நடைபெற்றது.

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில், ஊழியப்பத்து கிராமத்தில் உள்ள பண்ணையில் வெள்ளாடுகள் வளர்ப்பில் நோய் மேலாண்மை குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது. பயிற்சியை நிலையத் தலைவர் ஆ. சுரேஷ் தொடங்கிவைத்துப் பேசினார்.

நிலையம் சார்பில் காரைக்கால் பகுதி விவசாயிகளுக்கு கிடைக்கும் உதவிகள் குறித்தும், இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க நிலையம் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் குறித்தும் அவர் விளக்கினார். முற்றிலும் ஊழியப்பத்து கிராமத்தில் உள்ள பண்ணையில் நெல், தோட்டப் பயிர் யாவும் இயற்கை முறையிலேயே பயிர் செய்யப்படவுள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் நேரில் வந்து தகவல்களை தெரிந்து செல்லவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது என்றார்.

காரைக்கால் பகுதியில் உள்ள பல்வேறு கிராமங்களில் இருந்து வெள்ளாடு வளர்ப்பில் ஈடுபட்டிருப்போர் பலர் வந்திருந்தனர். நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் கோ. விஜயக்குமார், நிலைய செயல் திட்டப் பணிகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கிக் கூறினார்.

வெள்ளாடு வளர்ப்பில் ஏற்படும் நோய்களான கழிச்சல்நோய், வயிறு உப்புசம், குடல்புழுத் தாக்கம், குட்டி விசிறி நோய், ரணஜன்னி, கோமாரி, வெக்கை சார்பு நோய், ஆட்டு அம்மை, வாய் அம்மை போன்றவை குறித்து நிலைய கால்நடை தொழில்நுட்ப வல்லுநர் பா. கோபு விளக்கிப் பேசினார்.

அதிக புரதச்சத்துள்ள தீவனம், தாதுப்புகளின் தேவை, தடுப்பூசி, முறையான குடற்புழு நீக்கம், நல்ல ஆரோக்கியமான ஆடுகளைத் தேர்ந்தெடுத்தல், மூலிகை மருத்துவம் போன்றவை நோய்த் தடுப்புக்கான வழிமுறைகள் என ஒவ்வொன்றாக விளக்கப்பட்டது.

ஆடுகள் வளர்ப்பின் மூலம் கிடைக்கும் லாபம் குறித்தும் முகாமில் விவரிக்கப்பட்டது. ஆட்டுக்குட்டி பராமரிப்பு மற்றும் கால்நடைகளில் குடல்புழு நீக்கத்தின் அவசியம் என்ற தலைப்பில் கையேடு வெளியிடப்பட்டது.

**"பிப்ரவரியில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும்**

பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிகளின் தேவைக்கேற்ப பிப்ரவரியில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், புதன்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு விளக்கமளித்து ஆட்சியர் பேசியது:

பெரம்பலூர் மின் வட்டத்தில் குன்னத்தை தலைமையிடமாகக் கொண்டு உபகோட்டம் உருவாக்கப்பட்டு, கடந்த 21 ஆம் தேதி முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. இதன்மூலம் வேப்பூர், துங்கபுரம், காடூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த மக்கள் தங்களது கோரிக்கைகள் மற்றும் தேவைகளுக்காக அரியலூர், பெரம்பலூருக்கு செல்லும் நிலை தவிர்க்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத்துறை மூலம் பெரம்பலூர் மாவட்டத்தில் 2015-16 ஆம் நிதி ஆண்டில் 51 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ. 70 கோடியில் அமைக்கப்பட்டு வருகிறது.

பெரம்பலூர் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நிறைவேற்றப்படும் அரசாணைகள் அனைத்தும், மாவட்ட நிர்வாகத்தின் இணைளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தேவைப்படும் இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் பிப்ரவரி மாதம் முதல் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும். எனவே விவசாயிகள் இதை முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

**டிச. 26, 27-ல் கால்நடைகளுக்கு மருத்துவ பரிசோதனை முகாம்**

பெரம்பலூர் மாவட்டத்தில் டிச. 26 மற்றும் 27 ஆம் தேதிகளில் கறவை பசுக்களுக்கான இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனை மற்றும் வெள்ளாடுகளுக்கான குடற்புழு நீக்க முகாம் நடைபெற உள்ளது என்றார் ஆட்சியர் தரேஸ் அஹமது.

இதுகுறித்து அவர் புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் விலையில்லா பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 2011-12 முதல் 2015-16 வரை 7,903 பயனாளிகளுக்கு 31,612 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2011-12 மற்றும் 2012-13 ஆம் ஆண்டுகளில் கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு தமிழ் புத்தாண்டு தினத்தில் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தின் மூலம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கறவைப் பசுக்களுக்கு,இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனையும், வெள்ளாடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் டிச. 26, 27 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது.

இதனால், கறவை பசுக்களின் பால் உற்பத்தித் திறனும்,வெள்ளாடுகளின் எடை அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது. மேலும் விவரங்களுக்கு, கால்நடை பராமரிப்புத் துறை துணை இயக்குநர் மனோகரன் (94421 51611) என்பவரைத் தொடர்பு கொள்ளலாம் என ஆட்சியரின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நோய் எதிர்ப்பு மூலிகை பானம் குறித்து விழிப்புணர்வு முகாம்**

நீடாமங்கலம் பகுதியில் நோய் எதிர்ப்பு மூலிகை பானம் தயாரிப்பது குறித்து பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் நோய் எதிர்ப்பு மூலிகை பானம் தயாரிப்பது குறித்து பல்வேறு இடங்களில் விழிப்புணர்வு முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில், திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

முகாமில், நோய் எதிர்ப்பு சக்தி அளிக்கும் பானத்தின் முக்கியத்தும் குறித்து டாக்டர் ஜி.சித்தர் விளக்கிப் பேசினார். முனைவர் க.ஞா.கவிதா ஸ்ரீ மூலிகை பானத்தின் கலவைகளான இஞ்சி, பூண்டு, எலுமிச்சை, புதினா இலைகொத்தமல்லி விதை மற்றும் தேன் பற்றியும், பானம் பற்றிய செயல் விளக்கமளித்தார்.

முகாமில் கலந்துகொண்ட மகளிர் சுய உதவிக் குழுவினர், இந்த மூலிகை பானம் குறித்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களிடையே விளக்கிக் கூற உள்ளதாகத் தெரிவித்தனர். வேளாண் அறிவியல் நிலைய திட்ட உதவியாளர் ரேகா, உதவியாளர்கள் மணிமாறன்,கோபால், ஏழுமலை, ர.கலைவாணி, ம.கலைமணி ஆகியோர் முகாமிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**மழை நீரில் பாதித்த நெற்பயிரை காப்பாற்றும் வழிமுறை: வேளாண் விஞ்ஞானிகள் அறிவுரை**

மழை நீரில் பாதித்த நெற்பயிரை அங்கக முறையில் பாதுகாக்க முட்டை வெங்காயக் கரைசலை தெளிக்கலாம் என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல்

நிலையத் தலைவர் ரெ.பாஸ்கரன், பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் இராஜா ரமேஷ் ஆகியோர் அறிவுறுத்தியுள்ளனர்.

ஒரு ஏக்கருக்கு, 10 முட்டையின் வெள்ளைக்கரு, 1 கிலோ சின்ன வெங்காயம் பயன்படுத்த வேண்டும். சின்ன வெங்காயத்தை நன்கு தோலுறித்து, அதை மாலை நேரத்தில் தண்ணீரில் நன்றாக ஊற வைக்க வேண்டும்.

முட்டையிலிருந்து வெள்ளைக் கருவை மட்டும் தனியாகப் பிரித்து எடுத்துக் கொள்ளவேண்டும். மறுநாள் காலையில் ஊற வைத்த வெங்காயத்தை நன்கு அம்மிக்கல்லில் வைத்து நசுக்கி எடுத்து ஒரு லேசான கோணிப்பையில் போட்டு, கோணிப்பையின் இரு முனைகளையும் இருவர் பிடித்து கயிறு திரிப்பதுபோல் திரிக்க வேண்டும்.

இதனால் கிடைக்கும் வெங்காயச் சாற்றா பாத்திரத்தில் பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் முட்டை வெள்ளைக்கரு மற்றும் வெங்காயச் சாறு இவற்றை நன்றாக கலக்க வேண்டும்.

ஒரு கைத்தெளிப்பானுக்கு 50 மில்லி கரைசல் என்ற அளவில் இந்தக் கரைசலைப் பயன்படுத்த வேண்டும். ஒரு ஏக்கருக்கு 12 டேங்குக்கு குறையாமல் பயன்படுத்த வேண்டும்.

இக்கரைசலை ஒருவார கால இடைவெளியில் மீண்டும் ஒரு முறை தெளிக்க வேண்டும். சாறு பிழியப்பட்ட வெங்காய சக்கைகளை பயிர்களுக்கு இட பயன்படுத்தலாம்.

**பயன்கள்**

முட்டை-வெங்காயக் கரைசல், பயிர் வளர்ச்சிக்குத் தேவையான வளர்ச்சி ஊக்கிகளாக இருப்பதால் நன்கு பயிர்கள் வளரும். அத்துடன், நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்த இந்தக் கரைசலுடன் சூடோமோனஸ்

அல்லது வசம்புத்தூள் ஏக்கருக்கு 50 கிராம் என்ற விகிதத்தில் கலந்தும் பயன்படுத்தலாம்.

அறிவியல் ரீதியாக, இந்த முட்டை வெங்காயக் கரைசலில் புரதச்சத்து 13 சதவீதமும், கந்தகச் சத்து மித்யோனைன் மற்றும் சிஸ்டின் என்ற அமினோஅமில வடிவத்திலும் உள்ளது.

வெங்காயச் சாறில் அல்லைல் கந்தகக் கூறுகள் மைரோசைனஸ் வடிவத்திலும் இருப்பதால் நெல்லில் தோன்றும் கந்தகக் குறைபாடு நிவர்த்தி செய்யப்படுகிறது என்றனர் வேளாண் விஞ்ஞானிகள்.

**நெல் வயல்களில் பயிர்ப் பாதுகாப்புக் குழு ஆய்வு: நோய்த் தடுப்பு குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி**

திருநெல்வேலி மாவட்டத்துக்கான பயிர்ப் பாதுகாப்புக் குழுவினர், நெல் பயிரிடப்பட்டுள்ள விளைநிலங்களில் ஆய்வு செய்து வருகின்றனர்.

மேலும், நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக விவசாயிகளுக்கு நேரடி களப் பயிற்சியும் அளித்து வருகின்றனர்.

திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டத்துக்கு வந்திருந்த வாசுதேவநல்லூர் வட்டார விவசாயிகள், தங்களது பகுதிகளில் நெல் பயிரில் நோய் தாக்குதல் அதிகம் உள்ளதாகக் குறிப்பிட்டனர். இதையடுத்து, மாவட்ட பயிர்ப் பாதுகாப்புக் குழுவினரை அந்தப் பகுதிகளுக்குச் சென்று ஆய்வு நடத்த ஆட்சியர் மு. கருணாகரன் உத்தரவிட்டார். இதன்படி, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் இல. பெருமாள் தலைமையில், அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலைய தலைவர் ஆறுமுகச்சாமி, பூச்சியியல் பேராசிரியர் அரிவளம் காத்தபிள்ளை, பயிர் நோயியல் பேராசிரிர்கள் ரஜினி மாலா ஆகியோரடங்கிய பயிர்ப் பாதுகாப்புக் குழுவினர், வாசுதேவநல்லூர் வட்டாரத்துக்குள்பட்ட பகுதி வயல்களில் புதன், வியாழக்கிழமைகளில்

நேரடி ஆய்வு செய்தனர். விஸ்வநாதபேரி, முத்தூர்குளப்பரவு பகுதிகளில் நெல் பயிர்களுக்கு கழுத்துக் குலைநோய் தாக்கியிருப்பது தெரியவந்தது. இதையடுத்து, விவசாயிகளுக்கு நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து வயலிலேயே களப் பயிற்சி அளிக்கப்பட்டது.

நோய் தாக்கிய பயிர்களின் கழுத்துப் பகுதியில் சாம்பல் நிற புள்ளிகள் தென்படும். இதனால், தானியம் உருவாவது குறைந்து மகசூல் இழப்பு ஏற்படும். இந்த நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்த வயல்கள் மற்றும் வரப்புகளில் களைகளை அகற்றி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். குலை நோய் தென்பட்டால் தழைச்சத்து உரமிடுவதை தவிர்க்க வேண்டும். நோய் தாக்கிய வயல்களில் டிரைசைக்கிளோசோல் 75 சதம் மற்றும் நனையும் தூள் 120 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். இல்லையெனில் அசோக்சிஸ்டோராபின் 200 மி.லி. மற்றும் ஒரு மில்லி ஒட்டும் திரவத்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். முதன்முறை மருந்து தெளித்த பின்னர் 15 நாள் கழித்து மீண்டும் ஒருமுறை தெளிக்க வேண்டும். நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய உழவியல் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த ஆய்வின்போது, வாசுதேவநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் முருகன், வேளாண் அலுவலர் பாலசுப்பிரமணியன் மற்றும் உதவி அலுவலர்கள் உடனிருந்தனர்.

இதேபோல, மாவட்டம் முழுவதும் வயல்வெளிகளைப் பார்வையிடும் பாதுகாப்புக் குழுவினர் விவசாயிகளுக்கு போதிய ஆலோசனைகளையும், தடுப்பு முறைகளையும் கற்றுத்தருவர் என வேளாண்மை இணை இயக்குநர் இல. பெருமாள் தெரிவித்தார்.

**மானியத்தில் வேளாண் கருவி: ரூ.1.27 கோடி நிதி ஒதுக்கீடு**

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வழங்கும் திட்டத்திற்காக மாவட்டத்திற்கு ரூ.1.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக 2015-16ஆம் நிதியாண்டில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் வேளாண்மை இயந்திரமயமாக்கலுக்கான சார் இயக்கத்தின் கீழ் ரூ.1.27 கோடி கடலூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நெல் நடவு இயந்திரம், பல்வகை தானியங்கள் கதிரடிக்கும் கருவி, நேரடி விதைப்புக் கருவி, புல்வெட்டும் கருவி, தேங்காய் மட்டை உரிக்கும் கருவி, மணிலா காய் பிரித்தெடுக்கும் கருவி போன்றவை மானியத்தில் பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள், சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், பெண் விவசாயிகள் மற்றும் பொதுப் பிரிவினரிடமிருந்து வரவேற்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறவுள்ள கடலூர் மாவட்ட விவசாயப் பெருமக்கள், தங்களது வட்டத்துக்குள்பட்ட உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகங்களில் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து பயன் அடையலாம்.

கடலூர், பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி வட்டம் விவசாயிகள் கடலூர்- பாண்டி சாலையில் சின்னகங்கணாங்குப்பத்தில் உள்ள உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தையும், சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோவில் வட்டம் பகுதி விவசாயிகள் சிதம்பரம் பள்ளிப்படையிலுள்ள உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தையும், விருத்தாசலம் மற்றும்

திட்டக்குடி வட்ட விவசாயிகள் விருத்தாசலம் பூதாமூரிலுள்ள உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தையும் தொடர்பு கொள்ள வேண்டும் என்று ஆட்சியர் அதில் தெரிவித்துள்ளார்.

**பசுமை வளாக சாதனையாளர் விருது வழங்கும் விழா**

புதுச்சேரி காலாப்பட்டில் உள்ள ஜவஹர் நவோதயா வித்யாலயா பள்ளி முன்னாள் மாணவர் சங்கம் சார்பில் பசுமை வளாக சாதனையாளர் விருது வழங்கும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு பள்ளி முதல்வர் அ.வினையத்தான் தலைமை வகித்தார். துணை முதல்வர் கமலம் முன்னிலை வகித்தார். புதுவை பல்கலை. சுற்றுச்சூழல் ஆய்வு மாணவர்கள் மு.நந்திவர்மன், கோல்டா அற்புதலின் ஆகியோருக்கு சுற்றுச்சூழல் மேம்பாட்டுச் சேவைக்காக பசுமை வளாக சாதனையாளர் விருதுகள் வழங்கப்பட்டன. விருதுகளை டாக்டர் தமிழ்வாணன் வழங்கினார். சங்கத் துணைத் தலைவர் ஆனந்து, பொதுச் செயலர் அருள்முருகன், பொருளாளர் கோபி உள்பட பலர் பங்கேற்றனர்.

பசுமை வளாகத் திட்டம் என்பது பயோகீகஸ், கம்போஸ்ட், மண்புழு உரம், இயற்கை காய்கறித் தோட்டம், கழிவுநீர் சுத்திகரிப்பு இயற்கை முறை போன்றவற்றை சுழற்சி முறையில் இணைப்பதாகும். வரும் ஆண்டு முதல் மாணவ, மாணவியரிடையே சுற்றுச்சூழல் மேம்பாடு ஹெர்பேரியம் செய்தல், பீமா மூங்கில் வளர்ப்பு போன்றவற்றை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பசுமை வளாக சாதனையாளர் திட்ட விருது பெற்ற நந்திவர்மன், கோல்டா அற்புதலின் கூறியதாவது: இத்திட்டம் புதுவையில் உள்ள அனைத்து பள்ளி, கல்லூரிகளிலும் தீங்கு விளைவிக்கும் மக்கும் குப்பையை இயற்கை உரமாக மாற்றி நோயை உண்டாக்கும் கிருமிகளை கட்டுப்படுத்தும். மேலும் புதுவை நகரத் திட்டம் வெற்றி பெற பசுமை வளாகங்கள் துணை நிற்கும். வருங்கால இந்தியாவை வளர்ச்சிப்

பாதையில் கொண்டு செல்வதில் பெண்கள் அதிகம் பங்கு பெற வேண்டும் எனத் தெரிவித்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நெல்லை, தூத்துக்குடியில் 22 ,852 ஏக்கருக்கு மணிமுத்தாறு அணை தண்ணீர் பாசனத்திற்கு திறப்பு**

திருநெல்வேலி: மணிமுத்தாறு அணையில் இருந்து பிசான சாகுபடிக்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் தற்போதைய, வடகிழக்கு பருவமழை வழக்கத்தை விட அதிகமாக பெய்துள்ளது. இதனால் பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு உள்ளிட்ட அனைத்து 11 அணைகளும் நிரம்பிவிட்டன. 118 அடி உயரம் கொண்ட மணிமுத்தாறு அணை ஏற்கனவே நிரம்பி உபரி நீர் தாமிரபரணி ஆற்றில் திறந்துவிடப்பட்டது. அணையில் நேற்று காலையில் 117 அடி நீர்மட்டம் இருந்தது. பிரதான கால்வாய் மூலம் நான்கு ரீச் பகுதிகளின் பிசான நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறக்க விவசாயிகள் கேட்டுக்கொண்டதன்பேரில் தண்ணீர் திறக்க முதல்வர் ஜெ.,உத்தரவிட்டார். இதன்படி நேற்று நெல்லை கலெக்டர் கருணாகரன் தண்ணீரை திறந்துவைத்தார். வினாடிக்கு 200 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. இதன் மூலம் நெல்லை, அம்பாசமுத்திரம், நாங்குநேரி, ராதாபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் திருச்செந்தூர், சாத்தான்குளம் வட்டங்களில் 22 ஆயிரத்து 852 ஏக்கர் நிலம் பாசனம் வசதி பெறும் என கலெக்டர் கருணாகரன்

தெரிவித்தார். நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை அதிகாரிகள், பாசன விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

**பொங்கல் பண்டிகைக்கு மஞ்சள் செடிகள் தயார்**

ஆர்.கே.பேட்டை:பொங்கல் பண்டிகைக்கு தேவையான, மஞ்சள் கொத்து செடிகள், செழிப்பாக வளர்ந்து தயார் நிலையில் உள்ளன.பொங்கல் திருநாளில், பொங்கல் பானையை அலங்கரிக்கவும், பூஜை யில் வைக்கவும், மஞ்சள் கொத்து செடிகள் பயன்படுகின்றன. புது மஞ்சள் கிழங்கின் வாசனை, வீடு முழுவதும் மணம் வீசும். இதற்காக, ஏராளமான மஞ்சள் கொத்து செடிகளை விவசாயிகள் பயிர் செய்துள்ளனர்.ஆர்.கே.பேட்டை அடுத்த, முள்ளிபாளை யம், சகஸ்ரபத்மாபுரம், கீளப்பூடி உள்ளிட்ட பகுதிகளில், மஞ்சள் கொத்து செடிகள் பயிரிடப்பட்டுள்ளன. அந்த பகுதிகளில், மஞ்சள் கிழங்குகளை தனியாக வேகவைத்து, சந்தைக்கு அனுப்பும் வழக்கம் கிடையாது. பொங்கல் பண்டிகை தேவையை பூர்த்தி செய்யவே மஞ்சள் கொத்து செடிகள் பயிரிடப்படுகின்றன.போகிக்கு முன்தினம், மஞ்சள்கொத்து அறுவடை நடக்கும். உள்ளூர் தேவை போக, அதிகப்படியாக இருக்கும் மஞ்சள்கொத்து செடிகள், சென்னைக்கு அனுப்பி வைக்கப்படும். மூன்று மாதங்களாக தொடர் மழைப் பொழிவு இருந்ததால், மஞ்சள் செடிகள் செழிப்பாக வளர்ந்துள்ளன.

**அதிசய, அழகிய மயில் மீன்**

ஈரோடு: ஈரோடு ரயில்வே ஸ்டேஷன் ரோட்டில் ஸ்டோனி பிரிட்ஜ் பகுதியில் கடல் மீன் மார்கெட் செயல்பட்டு வருகிறது. மார்க்கெட்டில் வியாபாரி முனியன் என்பவர் கடைக்கு வந்த மீனில் இருபது கிலோ எடை, நான்கு அடி நீளமுள்ள, மயில் மீன் இருந்தது. ஊசி போன்ற கூறிய மூக்குடன், அழகாகவும், செதில்கள் மயில் தேகை போல் ஒரு அடி அகலத்துக்கு விரிந்தும் காணப்பட்டது. இதுகுறித்து வியாபாரிகள்

கூறியதாவது: இவ்வகை அதிசய மீன்கள் ஆழ்கடல் பகுதிகளில் தான் அதிகம் கிடைக்கும், மீனவர் வலையில் எளித்தில் சிக்காது. வலையை துளைத்துக் கொண்டு செல்லும் தன்மை கொண்டவை. இது நெஞ்சு சளிக்கு நல்ல மருந்தாகும், குழந்தைகள், பெரியவர்கள் வரை அனைவரும் உண்ணலாம். கிலோ, 400 ரூபாய் வரை போகும். தூத்துக்குடியில் இருந்து இந்த மீன் வந்துள்ளது. இவ்வாறு கூறினர்.

**நம்பியூரில் நெற்பயிர் பாதுகாப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி**

கோபி: நம்பியூர் வட்டாரம் சுண்டக்காம்பாளையத்தில் நெற் பயிரில் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி நடந்தது. நம்பியூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைத்தம்பி தலைமை வகித்தார். வேளாண் அறிவியல் நிலைய பண்ணை மேலாளர் திருமூர்த்தி, நோய் மேலாண்மை குறித்து பேசினார். சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாமல், இயற்கை உரங்களை பயன்படுத்துவது, பசுந்தாள் உரங்களின் பயன்பாடு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. சுண்டக்காம்பாளையம், சின்னாரி பாளையம், மோடூர்பாளையம் கிராம விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**நார்த்தங்காய் கிலோரூ.10 அதிகரிப்பு**

திண்டுக்கல்;திண்டுக்கல்லில் சிறுமலை நார்த்தங்காய் விலை ரூ.10 அதிகரித்து கிலோ ரூ.30க்கு விற்றது.பாச்சலூர் மலைப்பகுதி கிராமங்கள் மற்றும் சிறுமலை பகுதிகளில் விளைந்த நார்த்தங்காய் திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு வருகிறது. சமவெளிப்பகுதியில் விளையும் நார்த்தங்காயும் விற்பனைக்கு வருகிறது. இந்த நார்த்தங்காய்களை ஜூஸ் போடவும், ஊறுகாய் போடவும் மக்கள் விரும்பி வாங்கி செல்கின்றனர். இங்கிருந்து கேரளாவிற்கு அதிகளவில் செல்கிறது. கடந்த பல நாட்களாக ஒரு கிலோ நார்த்தங்காய் ரூ.18 முதல்

ரூ.20 வரைக்கும் விற்றது. ஆனால் சில நாட்களாக வரத்து குறைந்து, விலை அதிகரித்தது.

இதனால் ஒரு கிலோ நார்த்தங்காய் ரூ.30 க்கு விற்பனையாகிறது. தரமான நார்த்தங்காய்கள் ரூ.35 முதல் ரூ.40க்கும் விற்றது.வியாபாரி ஒருவர் கூறுகையில்,"சீசன் முடிந்து, வெயில் காலம் துவங்கி விட்டதால் நார்த்தங்காய் வரத்து குறைந்துள்ளது. இதனால் விலை சற்று உயர்ந்துள்ளது' என்றார்.

**பூசணி விளைச்சல் அமோகம்:விலை ஒரு கிலோ ரூ.6**

பழநி:பழநி, ஒட்டன்சத்திரம் பகுதியில் சர்க்கரை பூசணிக்காய் வரத்து அதிகரித்துள்ளது. ஒரு கிலோ ரூ.6க்கு விற்கப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டம் பழநி சத்திரப்பட்டி, பாலசமுத்திரம், பாப்பம்பட்டி, காவலப்பட்டி, குதிரையாறுஅணைப்பகுதி மற்றும் ஒட்டன்சத்திரம் மஞ்சநாயக்கன்பட்டி, சத்திரப்பட்டி, காளிப்பட்டி, பெருமாள்நாயக்கன்வலசு பகுதிகளில் அதிக லாபம் தரும் சர்க்கரை பூசணி பயிரிட்டுள்ளனர்.

தற்போது சாரல் மழைபெய்வது, பனிவிழுவது போன்றவற்றால் பூசணிக்காய் விளைச்சல் நன்றாக உள்ளது. ஒருகாய் அதிகபட்சமாக 7கிலோ வரை எடையுடன் உள்ளது. ஆனால்விலையோ ஒரு கிலோ ரூ.6 முதல் விற்கப்படுகிறது. கடந்த ஆண்டைவிட (ரூ.3) தற்போது கூடுதல் விலைகிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பெருமள்நாயக்கன்வலசு விவசாயி ஆனந்தன் கூறுகையில்,"" 3 ஏக்கர் பரப்பளவில் அர்ஜீன் ரக சர்க்கரை பூசணிக்காய் சாகுபடி செய்துள்ளேன். 90 நாட்களில் மகசூல் எடுக்கலாம்.

கடந்த மாதம் மழைபெய்தால் சிறிது விளைச்சல் பாதிக்கப்பட்டது. தற்போது காய்பிடிப்பதற்கு ஏற்றவாறு பருவநிலைமாறி விளைச்சல்

நன்றாக உள்ளது. கடந்தாண்டைவிட இவ்வாண்டு கூடுதல் விலை கிடைப்பதால் மகிழ்ச்சியே,"என்றார்.

**காய்கறி விலை ஏற்றத்தால்நாற்று விற்பனை அமோகம்**

ஒட்டன்சத்திரம்:காய்றி விலை அதிகரித்துள்ளதால் ஒட்டன்சத்திரத்தில் நாற்று விற்பனை சூடு பிடித்துள்ளது.கடந்த சில நாட்களாக பெய்த மழை காரணமாக தக்காளி, காலிபிளவர், கத்தரி உள்ளிட்ட காய்கறி செடிகள் சேதமடைந்து, விளைச்சல் பாதிக்கப்பட்டது. மார்க்கெட்டில் வரத்து குறைவாக உள்ளதால், விலை ஏறுமுகமாக உள்ளது. இதையடுத்து தற்போது காய்கறியை வாங்கி பயிரிட்டால் நல்ல விலை கிடைக்கும் வாய்ப்புள்ளதால் விவசாயிகள் அதிகமாக காய்கறி சாகுபடிக்காக நாற்றுகளை வாங்கிச் செல்கின்றனர்.

ஒட்டன்சத்திரம் அருகே உள்ள அத்திக்கோம்பை, சாலைப்புதூர், அம்பிளிக்கை மற்றும் சுற்றி உள்ள கிராமங்களில் நாற்றுப் பண்ணைகள் அதிகம் உள்ளன. தேனி, அயலூர் மற்றும் உள்ளூர் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தற்போது தக்காளி நாற்றுகளை அதிகமாக வாங்கிச் செல்கின்றனர். ஆயிரம் எண்ணிக்கை கொண்ட தக்காளி நாற்றின் விலை ரூ.450 லிருந்து ரூ.500 வரை விற்கப்படுகிறது. இதே போல் காலிபிளவர், புகையிலை நாற்றுகளின் விற்பனையும் அதிகமாக உள்ளது.

இனிவரும் நாட்களில் காய்கறிகளுக்கு நல்ல விலை கிடைக்கும் என்பதால், விவசாயிகள் நாற்றுகளை அதிகமாக வாங்கிச் செல்வதாக நாற்றுப்பண்ணை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இருந்த போதிலும் தற்போது பெய்யும் மழை போதுமானதாக இல்லை என்று சில விவசாயிகள் தெரிவித்தனர்.

**விவசாயிகளுக்கு வெளிப்பள்ளி பயிற்சி**

நாமக்கல்: நாமக்கல் அடுத்த, எருமப்பட்டியில் விவசாயிகளுக்கு நெல்வயல் வெளிப்பள்ளி பயிற்சி நடந்தது. பயிற்சிக்கு அட்மா தலைவர்,

தனசேகரன் தலைமை வகித்தார். திட்ட ஒருங்கிணைப்பாளர் தங்கராஜு, களை நிர்வாகம், நீர் நிர்வாகம், உர நிர்வாகம் பற்றி விளக்கினார். மேலும், உழவு முதல் அறுவடை வரையிலான தொழில்நுட்பங்கள், விவசாயிகளின் வயலிலேயே செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. நெற்பயிரில், இயந்திரம் மூலம் நடவு செய்வதின் நன்மைகள் பற்றியும், பூச்சி நோய் தாக்குதல் பற்றியும் கூறப்பட்டது. மேலும், சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றிய கையேடு மற்றும் இடுபொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

**மஞ்சள் கிழங்கு கொத்து விளைச்சல் அதிகரிப்பு**

சிவகங்கை:மாவட்டத்தில் பொங்கலுக்காக மஞ்சள் கிழங்கு கொத்து அதிகளவில் விளைவிக்கப்பட்டுள்ளது. சிவகங்கை, கண்டாங்கிபட்டி, கூட்டுறவுபட்டி, சாலூர், இடையமேலூர் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் செங்கரும்பு விளைச்சல் நடைபெறுகிறது.இப்போதிருந்தே வெளியூர்களுக்கு செங்கரும்பு அனுப்பப்படுகிறது. பொங்கல் அன்று பானையில் மஞ்சள் கிழங்கை சுற்றுவது ஐதீகம். சிவகங்கை அருகே சாலூர், காரைக்குடி அருகே அரியக்குடி, பெரியகோட்டை, திருப்புத்தூர் பகுதிகளில் விவசாயிகள் ஊடுபயிராக மஞ்சள் கிழங்கு கொத்து விளைச்சலில் ஈடுபட்டுள்ளனர்.தற்போது அறுவடைக்கு தயாரான நிலையில் உள்ளது. கிழங்கின் தன்மைக்கு கேற்ப ஒரு கொத்து ரூ.10 முதல் 30 வரை விற்கப்படுகிறது.

# தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### அரிசி விலை கிடுகிடு உயர்வு ஏழை, நடுத்தர மக்கள் அதிர்ச்சி



உத்தமபாளையம்: அரிசி விலை திடீரென உயர்ந்துள்ளதால், ஏழை, நடுத்தர மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை எதிர்பாராதவிதமாக கொட்டி தீர்த்த நிலையில் சென்னை, கடலூார், காஞ்சிபுரம், திருவள்ளூர், தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்கள் மழை வெள்ளதால் பெரும் பாதிப்பை சந்தித்தன. மற்ற மாவட்டங்களில் மழை பெய்தாலும் பெரிய அளவில் பாதிப்புகள் இல்லை. தமிழகத்தில் டெல்டா மாவட்டங்கள், தேனி, திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட தென் மாவட்டங்களில் நெல் சாகுபடி அதிகளவில் செய்யப்படுகிறது. மழைக்கு முன்னர் அறுவடை செய்யப்பட்ட நெல், அரவை மில்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. ஆனால் தொடர் மழை காரணமாக மில்களில் அரவை பாதிக்கப்பட்டதால், அரிசி உற்பத்தியில் சரிவு ஏற்பட்டது. தவிர கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்தும் தமிழகத்திற்கு அரிசி கொள்முதல்

செய்யப்படுகிறது. ஆந்திராவிலும் கனமழை கொட்டியதால் நெல் அறுவடை பாதிக்கப்பட்டது. ஆந்திராவில் இருந்து நெல் வரத்து பாதிக்கும் மேல் குறைந்ததால் தமிழகத்தில் தற்போது அரிசி விலை அதிகரிக்க தொடங்கி உள்ளது. சில தினங்களுக்கு முன்பு வரை ஐ.ஆர்.20 ரகம் 25 மூட்டை கொண்ட சிப்பம் ரூ.700க்கு விற்பனையானது. இது தற்போது 800 ஆக அதிகரித்துள்ளது. செல்லப்பொன்னி ரக அரிசி ரூ.750ல் இருந்து ரூ.850 ஆக உயர்ந்துள்ளது. டீலக்ஸ் பொன்னி ரூ.800ல் இருந்து ரூ.900 ஆக உயர்ந்துள்ளது. இதனால் சில்லரை விலையும் அதிகரித்துள்ளது. கர்நாடகா பொன்னி ஒரு கிலோ 38ல் இருந்து □42 ஆக உயர்ந்துள்ளது. இதனால் நடுத்தர, ஏழை மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். அரிசி வியாபாரிகள் கூறுகையில், ``தமிழகத்தில் வெள்ளம் பாதித்த மாவட்டங்களில் குடோன்களில் இருப்பு வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள், மழை நீரால் சேதமடைந்து விட்டன. தவிர தொடர் மழையால் அறுவடையில் பாதிப்பு, அரவை மில்களுக்கு எடுத்து செல்வதில் ஏற்பட்ட தாமதம் உள்ளிட்ட காரணங்களால் அரிசி விலை கிடுகிடு என உயர்ந்து வருகிறது. கர்நாடகா, ஆந்திராவில் இருந்தும் வரத்து குறைந்து விட்டதால், அரிசி விலை மேலும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது'' என்றனர்.

**வரட்டுப்பள்ளம் அணையில் இருந்து ஏரிப்பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு**

அந்தியூர், : வரட்டுப்பள்ளம் அணையில் இருந்து ஏரிப்பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அந்தியூர் அருகேயுள்ள அடர்ந்த வனப்பகுதியில் வரட்டுப்பள்ளம் அணையுள்ளது. இந்த அணைக்கு தாமரைக்கரை வனப்பகுதியின் மேற்கு பகுதியில் பெய்யும் மழை மற்றும் கும்பரவாணி, தோனி மடுவு, வரட்டுப்பள்ளம் பகுதிகளில் பெய்யும் மழை நீர் ஆதாரமாக உள்ளது. அணை இந்த ஆண்டு இருமுறை நிரம்பி உபரிநீர் வெளியேறியுள்ளது. இது பாசனத்திற்கு மட்டுமின்றி மீன்

வளர்ப்பு மற்றும் வனவிலங்குகளின் தாகம் தீர்க்கும் அணையாகவும் இருந்து வருகிறது. நேற்று காலை இந்த அணையிருந்து ஏரிப்பாசனத்திற்காக அந்தியூர் பெரிய ஏரி, பிரம்மதேசம், வேம்பத்தி, ஆப்பக்கூடல் ஆகி 4 ஏரிகளுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணை தண்ணீரை அமைச்சர் தோப்பு வெங்கடாசலம் திறந்து விட்டார். 35 கன அடி வீதம் 10 நாட்களுக்கு திறந்து விடப்படுகிறது. இதனால் மறைமுகமாக 1076 ஏக்கர் பாசன வசதி பெறும். தண்ணீர் திறப்பு நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் பிரபாகரன், எம்எல்ஏ ரமணீதரன், ஒன்றிய அதிமுக செயலாளர் ராஜா, பேரூராட்சி தலைவர் மீனாட்சிசுந்தரம், வட்டாட்சியர் பூபதி, கூட்டுறவு சங்கத் தலைவர் சண்முகானந்தம், ஊராட்சி தலைவர்கள் குமாரசாமி, வெள்ளியங்கிரி, முன்னாள் ஒன்றிய செயலாளர் வெங்கடாசலம், கவுன்சிலர்கள் நாமக்கல் சிவக்குமார், பிரகாஸ் மற்றும் பொதுப்பணித்துறை, வனத்துறை அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**30ம்தேதி வேளாண் குறைதீர் கூட்டம்**

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் டிசம்பர் மாதத்திற்கான வேளாண் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 30ம்தேதி காலை 11 மணிக்கு மாவட்ட கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் காலை 11 மணி முதல் 11.30 மணி வரை மனு கொடுக்கலாம். 11.30 மணி முதல் 12.30 மணி வரை விவசாய சங்க பிரதிநிதிகள் விவசாயம் தொடர்பான தங்களது பகுதி பிரச்னை குறித்து கருத்து தெரிவிக்கலாம். பிற்பகல் 12.30 மணி முதல் 1.30 மணி முடிய அலுவலர்களின் விளக்கங்களும் தெரிவிக்கப்படவுள்ளது. இந்த கூட்டத்தில் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு பயன் பெற கலெக்டர் பிரபாகர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாயிகள் கலந்துரையாடல்**

ஜீயபுரம், : சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையத்தில் ஜெய் கிஷான் ஜெய் விக்யான் தினத்தை முன்னிட்டு விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது. அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் விஜயலட்சுமி வரவேற்றார். சிறுகமணி பேரூராட்சி தலைவர் செல்வம், ஒன்றியக்குழு உறுப்பினர் பாலசுப்ரமணியன், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க தலைவர் செந்தில்குமார் முன்னிலை வகித்தனர். சிறுகமணி கரும்பு ஆராய்ச்சி நிலைய தலைவர் சந்திரசேகரன் தலைமை வகித்து பேசுகையில், பருவநிலை மாற்றம் நிலவும் தற்போதைய சூழலில் மண் வளத்தை பாதுகாப்பது மிக அவசியம் என்றார். பல்கலை கழக விஞ்ஞானிகள் மண் வகைகளுக்கு ஏற்ற கரும்பு மற்றும் நெற்பயிர் ரகங்கள், களர், உவர் நிலங்களின் தன்மை, இயற்கை உரங்களின் பயன்பாடு, மண் பகிசோதனை அடிப்படையில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம்குறித்து விளக்கி பேசினர். தொடர்ந்து களர், உவர் நிலங்களில் ஏற்படும் பிரச்னைகள், அதற்கான தீர்வு குறித்தும், மண் பரிசோதனை, ஒருங்கிணைந்த உரநிர்வாகம் ஆகியன குறித்து கலந்துரையாடல் நடந்தது. திருச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த 75க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**சிறு, குறு விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க 100 சதவீத மானியம்விண்ணப்பிக்க அழைப்பு**

கரூர், : சிறு, குறு விவசாயிகள் 100 சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்க விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்ட நிர்வாகம் இது குறித்து வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது: இரண்டாம் பசுமை புரட்சியில் இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு லாபம் என்ற குறிக்கோளின்படி குறைந்த அளவு பாசன நீரைக் கொண்டு கூடுதல் பரப்பில் சாகுபடி மேற்கொண்டு உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டியுள்ளது. நீர்நிலைகளில் தற்போது

பாசனநீர் குறைந்த அளவே கிடைக்கிறது. பாசனநீர் மேலாண்மையில் நுண்ணீர்பாசனம் முக்கிய பங்கு வகிக்கிறது. இதில் சொட்டுநீர்பாசனம், தெளிப்புநீர்பாசனம் அமைக்க மத்திய மாநில அரசுகள் மூலம் மானியம் வழங்கப்படுகிறது. கரூர் மாவட்டத்தில நடப்பாண்டில் நுண்ணீர் பாசனத் திட்டம் (பிரதம மந்திரி கிரிஷ் சஞ்சய்யோஜனா) திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவுள்ளது.

மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்களின் நுண்ணீர் பாசனம் அமைக்க 855 எக்டர் பரப்பிற்கு ரூ.4.79 கோடி நிதி இலக்கு பெறப்பட்டுள்ளது. 574 எக்டர் பரப்பிற்கு ரூ.3.63 கோடி நிதி குறியீட்டில் வழிகாட்டு நெறிமுறைகள் பெறப்பட்டுள்ளன. இதில் சிறு,குறு விவசாயிகளுக்கு 100சத மானியத்திற்கு குறைந்தது ஒரு எக்டர் பரப்பிற்கு ரூ.23 ஆயிரத்து 500 மானியம், அதிகபட்சம் 2 எக்டருக்கு வழங்கப்பட உள்ளது. இதர விவசாயிகளுக்கு 75சத மானியத்திற்கு கரூர் மாவட்டத்திற்கு 144 எக்டருக்கு ரூ.90.84லட்சம் மானியம் நிதி குறியீடு பெறப்பட்டுள்ளது. இதில் குறைந்த பட்சம் ஒரு எக்டருக்கு ரூ.17625 மானியமும் அதிகபட்சமாக 5 எக்டருக்கும் மானியம் வழங்கப்படும். இதேபோல நடப்பாண்டிற்கு தெளிப்பு நீர் பாசனத்திற்கு சிறு,குறு விவசாயிகளுக்கு 100சத மானியத்திற்கு 110எக்டருக்கு மானியமாக ரூ.20.33 லட்சமும் நிதிகுறியீடு பெறப்பட்டுள்ளது. எக்டருக்கு மானியம் ரூ.31600 இதர விவசாயிகளுக்கு 47 சதவீத மானியத்திற்கு 28 எக்டருக்கு மானியமாக ரூ.5 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதில் குறைந்தபட்சமாக ஒருஎக்டருக்கு ரூ.23700 மானியம் வழங்கப்படும். வழக்கம்போல் சிறு, குறு விவசாயிகளுக்கு ஒருஎக்டர் முதல் 2எக்டர் மானியம் இதரவிவசாயிகளுக்கு 5எக்டர் வரையும் மானியம் வழங்கப்படவுள்ளது.

கரூர் மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்காகும் வட்டாரங்களான அரவக்குறிச்சி, க.பரமத்திக்கு சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சத

மானியத்திற்கு மத்தியஅரசு 50 சதவீத தொகையும், தமிழக அரசு 50சதவீத தொகையும் வழங்குகிறது. இதர விவசாயிகளுக்கு 75சத மானியத்திற்கு மத்தியஅரசு 35சதவீதம், தமிழகஅரசு 40 சதவீதமும் வழங்குகிறது.

கரூர், தாந்தோணி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை, தோகமலை, கடவூர் ஆகிய 6 வட்டாரங்களுக்கு சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சத மானியத்திற்கு மத்தியஅரசு 35சதம், தமிழகஅரசு 65சதமும் மானியம் வழங்குகிறது. இதரவிவசாயிகளுக்கு 75 சத மானியத்திற்கு மத்தியஅரசு 25 சதம் தமிழகஅரசு 50 சதம் வழங்குகிறது. எனவே கரூர் மாவட்டத்தில் உள்ள தோட்டக்கலை பயிர்களான பழப்பயிர்கள் காய்கறிபயிர்கள், பூக்கள் மூலிகை பயிர்கள், தென்னையில் ஊடுபயிராக கொக்கோவிற்கு சொட்டுநீர்பாசனம் மற்றும் தெளிப்புநீர்பாசனம் அமைக்க கீழ்கண்ட ஆவணங்களுடன் பகுதி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர்களை அணுகி பயன்பெறலாம். சிட்டா அடங்கல், வரைபடம்(வருவாய்த்துறை மூலம்), குடும்ப அடையாளஅட்டை, ஆதார்அட்டைநகல், பாஸ்போர்ட் போட்டோ 4, சிறுகுறு விவசாயி எனில் சிறு குறு விவசாயி சான்று(வட்டாட்சியர் அளவில் கையொப்பம் பெற வேண்டும்), மண் மற்றும் பாசனநீர் மாதிரி ஆய்வு முடிவுகளுடன் விண்ணப்பிக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பயிர் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி**

திருவாடானை, : திருவாடானை அருகேயுள்ள டி.கிளியூரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்தபயிற்சிமுகாம் நடைபெற்றது. இப்பயிற்சியில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர். இதில் நவீன நெல்சாகுபடி முறைகள் குறித்து திருவாடானை வேளாண்மை உதவி இயக்குநர் நாகராஜ் விளக்கினார். ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து பரமக்குடி வேளாண்மை அலுவலர்

கருப்பையா, கலை மற்றும் நீர்மேலாண்மை பற்றிய தொழில்நுட்பம் குறித்து தொழில்நுட்ப வல்லுனர் முருகன், ஒருங்கிணைந்த உரம் மற்றும் பூச்சிநோய் நிர்வாகம் குறித்து தொழில்நுட்ப வல்லுனர் பிச்சைஆகியோர் விவசாயிகளுக்கு விளக்கினர்.மேலும் வயல்களில் நேரடியாக செயல்விளக்கத்துடன் கலந்துரையாடல் நடைபெற்றது. இம்முகாமிற்கு தொழில்நுட்ப வல்லுனர்கள் ராஜேஸ்வரி, இளையராஜா ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பேச்சிப்பாறை-சிற்றார் அணைகள் பாசனத்துக்காக மீண்டும் திறப்பு**



நாகர்கோவில்

பேச்சிப்பாறை மற்றும் சிற்றார் (1) அணைகள் நேற்று மீண்டும் பாசனத்துக்காக திறக்கப்பட்டன. தண்ணீர் திறப்பு

குமரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை சில நாட்கள் கனமழையாக பொழிந்தது. இதனால் அணைகள் மற்றும் குளங்கள் நிரம்பின. மழை 2 மாதம் நீடித்தது. இதனால் அணைகளில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தப்பட்டு, உபரி நீரை திறந்து விட்டனர்.

இந்த நிலையில் கடந்த 2 நாட்களாக மழை பெய்யவில்லை. இதனால் பாசனத்துக்காக அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன்படி பேச்சிப்பாறை மற்றும் சிற்றார் (1) அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது.

பேச்சிப்பாறை அணையில் இருந்து 206 கனஅடி தண்ணீரையும், சிற்றார் (1) அணையில் இருந்து 200 கனஅடி தண்ணீரையும் திறந்து விட்டுள்ளனர். பெருஞ்சாணி அணையில் இருந்து ஏற்கனவே 305 கனஅடி தண்ணீர் பாசனத்துக்காக சென்று கொண்டிருக்கிறது.

தண்ணீர்வரத்து

இந்த நிலையில் மாம்பழத்துறையாறு அணை, நிரம்பி வழிந்த நிலையிலேயே இன்னும் உள்ளது. 2½ மாதத்துக்கும் மேலாக இந்த நிலை நீடிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அணைக்கு நேற்று 3 கனஅடி தண்ணீர் வந்தது. அது உபரியாக வெளியே செல்கிறது. பேச்சிப்பாறை அணைக்கு நேற்று 208 கனஅடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு 82 கனஅடி தண்ணீரும், சிற்றார் (1) அணைக்கு 191 கனஅடி தண்ணீரும் உள்வரவாக இருந்தது. அணையின் நீர்மட்டத்தை பொறுத்தவரை

பேச்சிப்பாறையில் 46.33 அடியும், பெருஞ்சாணியில் 74.63 அடியும், சிற்றார் (1) அணையில் 16.83 அடியும், சிற்றார் (2) அணையில் 16.93 அடியும் தண்ணீர் இருந்தது.

**கிறிஸ்துமஸ் பண்டிகை எதிரொலி: தோவாளை மார்க்கெட்டில் மல்லிகை பூ விலை 'கிடுகிடு' உயர்வு ஒரு கிலோ ரூ.2500–க்கு விற்பனை**



கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி தோவாளை பூ மார்க்கெட்டில் நேற்று மல்லிகை பூவின் விலை 'கிடுகிடு'வென உயர்ந்து காணப்பட்டது. இதனால் ஒரு கிலோ ரூ.2500–க்கு விற்பனை செய்யப்பட்டது.

பூமார்க்கெட்

நாகர்கோவில் அருகே உள்ள தோவாளையில் பூ மார்க்கெட் உள்ளது. இங்கு தினமும் குமரி மாவட்டத்தில் இருந்து மட்டுமின்றி நெல்லை, மதுரை உள்பட பல இடங்களில் இருந்தும் பூக்கள் விற்பனைக்காக

கொண்டுவரப்படுகிறது. தினமும் அதிகாலையிலேயே விவசாயிகள் பூக்களை இருசக்கர வாகனம், ஆட்டோ, மினிடெம்போ, பஸ் உள்பட வாகனங்களில் கொண்டு வருகின்றனர். கிறிஸ்துமஸ் பண்டிகை நேற்று முன்தினம் ஒரு கிலோ ரூ.1300–க்கு விற்பனை செய்யப்பட்ட மல்லிகை பூ, நேற்று ரூ.1200 உயர்ந்து காணப்பட்டது. இதனால் ஒரு கிலோ ரூ.2500–க்கு விற்பனை செய்யப்பட்டது. மல்லிகை பூவின் விலை உயர்வு குறித்து பூ வியாபாரி விஸ்வநாதன் கூறுகையில் ‘‘நாளை (அதாவது இன்று) கிறிஸ்துமஸ் பண்டிகை என்பதால், மல்லிகை பூவின் தேவை அதிகமாக இருந்தது. அதே சமயம் பனிபொழிவு, மழையின் காரணமாக மல்லிகை பூவின் வரத்து மார்க்கெட்டிற்கு குறைவாக இருந்தது. இதனால் குறைந்த அளவில் இருந்த மல்லிகை பூக்களை வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்து சென்றனர்’’ என்று கூறினார். விவரம்

மேலும், மற்ற பூக்களின் விலை விவரம் வருமாறு:– பிச்சி ரூ.1800–க்கும், முல்லை ரூ.1500–க்கும், கனகாம்பரம் ரூ.350–க்கும், அரளி ரூ.350–க்கும், பட்டன்ரோஸ் ரூ.300–க்கும், வெள்ளை சிவந்தி ரூ.250–க்கும், ஸ்டெம்புரோஸ் ரூ.250–க்கும், சிவந்தி ரூ.200–க்கும், சம்பங்கி ரூ.150–க்கும், மருக்கொழுந்து ரூ.150–க்கும், கொழுந்து ரூ.120–க்கும், கேந்தி ரூ.80–க்கும், மஞ்சள் கேந்தி ரூ.80–க்கும், கோழிப்பூ ரூ.60–க்கும், வாடாமல்லி ரூ.60–க்கும், மாம்பழ கேந்தி ரூ.50–க்கும், துளசி ரூ.25–க்கும், பச்சை ரூ.10–க்கும், தாமரை (100 எண்ணம்) ரூ.500–க்கும், ரோஜா (100 எண்ணம்) ரூ.50–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

**தோட்டக்கலை பயிர்களுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க வேண்டும் கலெக்டர் அறிக்கை**



கரூர்

தோட்டக்கலை பயிர்களுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க வேண்டும் என்று கலெக்டர் ஜெயந்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

நீர்ப்பாசனம் அமைக்க மானியம்

கரூர் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

2–ம் பசுமை புரட்சியில் 2 மடங்கு உற்பத்தி 3 மடங்கு லாபம் என்ற முதல்–அமைச்சரின் குறிக்கோள் நிறைவேற கூடுதல் மகசூல் பெற வேண்டும். உணவு உற்பத்தி அதிகரிப்பில் நீர்ப்பாசனம் முக்கிய பங்கு வகிக்கிறது. தற்போதைய நிலையில் சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் அமைக்க மத்திய, மாநில அரசுகள் மானியம் வழங்கி வருகிறது. கரூர் மாவட்டத்தில் தோட்டக்கலைப்பயிர்களின் நுண்ணீர்ப் பாசனம் அமைக்க 855 ஹெக்டேர் பரப்பிற்கு ரூ.4 கோடியே 79 லட்சம் நிதி குறியீடு பெறப்பட்டுள்ளது.

அதே போன்று 574 ஹெக்டேர் பரப்பிற்கு ரூ.3 கோடியே 63 லட்சத்தில் நுண்ணீர் பாசனம் அமைக்க வழிகாட்டு நெறி முறைகள் பெறப்பட்டுள்ளன. இதில் சிறு,குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்திற்கு குறைந்தது ஒரு ஹெக்டேர் பரப்பிற்கு ரூ.23 ஆயிரத்து 500 மானியம் வழங்கப்படவுள்ளது.

சொட்டு நீர் பாசனம்

இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியத்திற்கு கரூர் மாவட்டத்திற்கு 144 ஹெக்டேருக்கு ரூ.90 லட்சத்து 84 ஆயிரம் மானியம் நிதிக்குறியீடு பெறப்பட்டு உள்ளது. இதே போல் நடப்பு ஆண்டிற்கு தெளிப்பு நீர் பாசனத்திற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்திற்கு 110 ஹெக்டேருக்கு மானியமாக ரூ.20 லட்சத்து 33 ஆயிரம் நிதி குறியீடு பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் கரூர் மாவட்டத்தில் வறட்சி வட்டாரங்களான அரவக்குறிச்சி, க.பரமத்தி ஆகிய பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்திற்கு மத்திய அரசு 50 சதவீதமும், தமிழக அரசு 50 சதவீதமும் வழங்குகிறது. எனவே கரூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தோட்டக்கலை பயிர்களான பழப்பயிர்கள், காய்கறிப் பயிர்கள், பூக்கள், மூலிகை பயிர்கள் ஆகிவற்றுக்கு சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்பாசனம் அமைக்க வேண்டும்.

இவ்வாறு கூறியுள்ளார்.

**கரூரில் கடந்த வாரத்தை விட வாழைத்தார் அதிக விலைக்கு ஏலம் போனது**



கரூரில் கடந்த வாரத்தைவிட நேற்று வாழைத்தார் அதிக விலைக்கு ஏலம் போனது.

வாழைத்தார்

கரூர் மாவட்டம் குளித்தலை, லாலாப்பேட்டை, வேலாயுதம்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வாழைகள் பயிரிடப்பட்டு தற்போது விளைச்சலுக்கு வந்துள்ளன. பெரும்பாலான வாழைத்தார்கள் வெட்டும் தருவாயில் இருந்தது. இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த பலத்த மழையால், வாழைத்தார்கள் வெட்டி விற்பனைக்கு கொண்டு வரமுடியவில்லை. இதனால் பல இடங்களில் வாழையிலேயே வாழைக்காய் கள் பழுக்க தொடங்கியது. அந்த சமயத்தில் மிக, மிக குறைந்த விலையிலேயே வாழைத்தார்கள் விற்கப்பட்டது. அதாவது ஒரு

வாழைத்தார் ரூ.10-க்கு விற்பனை ஆனது. இதனால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்தனர். மேலும் வாழை பயிரிட வாங்கிய கடனை எப்படி திருப்பி செலுத்துவது என்றும் கவலை அடைந்தனர்.

கடந்த வாரத்தை விட அதிக விலை

பின்னர் ஒரு வழியாக மழை நின்றது. அதன் பிறகு சில நாட்களாக விவசாயிகள் எதிர்பார்த்த விலைக்கு வாழைத்தார்கள் ஏலம் போக வில்லை. கடந்த வாரம் ஒரு வாழைத்தார் ரூ.100 வரை ஏலம் போனது. இந்த நிலையில் நேற்று கரூர் காமராஜ் மார்க்கெட்டில் உள்ள வாழைத்தார் ஏலம் நடக்கும் மையத்திற்கு ஏராளமான விவசாயிகள் வாழைத்தார்களை ஏலத்திற்கு கொண்டு வந்தனர். ஒரு கற்பூரவல்லி வாழைத்தார் ரூ.200-க்கு ஏலம் போனது. அதே போன்று பூவன் ரூ.100, ரஸ்தாலி ரூ.300-க்கு ஏலம் போனது. கடந்த வாரத்தை பார்க்கும் போது இந்த வாரம் சற்று அதிக விலைக்கு ஏலம் போனது. இது குறித்து வாழைத்தார்களை ஏலத்திற்கு கொண்டு வந்த விவசாயி ஒருவரிடம் கேட்ட போது, மழையால் வாழைத்தார்கள் விற்பனை சரியாக இல்லாமல் இருந்தது. இந்த நிலையில் நேற்று எதிர்பார்த்த அளவு விலை இல்லையென்றாலும், ஓரளவு சற்று அதிக விலைக்கு ஏலம் போனது. ஆனால் விவசாயிகளான எங்களுக்கு பெரும் நஷ்டம் தான் என்று கூறினார். இது குறித்து ஏலம் நடத்துபவர்கள் கூறும் போது, கடந்த வாரத்தை விட இந்த வாரம் வாழைத்தார் அதிக விலைக்கு ஏலம் போனது என்றுகூறினர்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் எண்ணெய் பனை சாகுபடி-மீன்வளர்ப்பு தொழிலை ஊக்குவிக்க வேண்டும் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் வலியுறுத்தல்

பெரம்பலூர் மாவட்டத்தில் எண்ணெய் பனை சாகுபடி மற்றும் மீன்வளர்ப்பு தொழிலை மாவட்ட நிர்வாகம் ஊக்குவிக்க வேண்டும் என்று விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள்

வலியுறுத்தினர்.

விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட கலெக்டர் தரேஸ்அகமது தலைமையில் கலெக்டர் அலுவலக கூட்டமன்றத்தில் நேற்று நடந்தது. மாவட்ட வருவாய் அதிகாரி மீனாட்சி, கூட்டுறவு மண்டல இணைப்பதிவாளர் சிவமுத்து குமாரசாமி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மாரிமுத்து, வேளாண்மை பொறியியல் துறை அதிகாரி நாகஜோதி உள்பட பல்வேறு துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர். கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாய சங்கத்தை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு பேசினர். அதன் விவரம் வருமாறு:- தமிழக விவசாயிகள் சங்க மாநில செயலாளர் ஆர்.ராஜாசிதம்பரம்:- 2008-ல் வறட்சியின்போது வறட்சி நிவாரணத்தொகை விவசாயிகளுக்கு கிடைப்பதற்கு முன்பாகவே பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டுவிட்டதால் வறட்சி நிவாரணம் பெறுவதற்கு மிகவும் தாமதம் ஏற்பட்டது. 2016-ல் சட்டமன்ற தேர்தல் வரஇருப்பதால், தற்போது வெள்ளநிவாரண உதவித்தொகையை போர்க்கால அடிப்படையில் உடனே வழங்கவேண்டும்.

நீர்மின்நிலையம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத்தலைவர் செல்லதுரை:- வெள்ளசேதத்திற்கு ஒருஎக்டேருக்கு ரூ.7410 வழங்குவதை உயர்த்தி ஒருஏக்கருக்கு ரூ.25ஆயிரமாக வழங்கவேண்டும். ராஜீவ் கரும்பு விவசாயிகள் பேரவை தலைவர் ஆர்மரிவரதராஜன்:- பெரம்பலூர் மாவட்டத்தில் நீர்நிலைகள் நிரம்பி உள்ளதால், மீன்வளர்ப்புத்தொழிலை மாவட்ட நிர்வாகம் ஊக்கவிக்க வேண்டும். உழவர்உழைப்பாளர் கட்சி தலைவர் ராமராஜ்:- விசுவக்குடியில் நீர்த்தேக்கம் கட்டி இப்பகுதி விவசாய கிணறுகளுக்கும், ஏரி, குளங்களுக்கும் நீர்ஆதாரம் பெருக வழிவகை செய்தது போல

விசுவக்குடியில் 10 மெகாவாட் நீர்மின்நிலையம் அமைக்க தமிழக அரசு முன்வரவேண்டும்.

மழைமானி

துங்கபுரம் ராமலிங்கம்:- குன்னம் பகுதி மக்கள் மழைஅளவை தெரிந்துகொள்வதற்காக வேப்பூரில் மழைமானி வைக்கவேண்டும்.

தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாவட்டசெயலாளர் அன்பழகன்:- பெரம்பலூர் மாவட்டத்தில் நடப்பு பருவத்தில் நெல்அதிகம் பயிரிடப்பட்டுள்ளதால் பெரம்பலூரில் நெல்கொள்முதல்நிலையம் திறந்து நெல்கொள்முதல் செய்யவேண்டும். பெரம்பலூர் நகரில் 1, 2-வது வார்டுகளில் கொசுக்களால் நோய்பரவுவதை தடுக்க நகராட்சி நிர்வாகம் கொசுமருந்து அடிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வேளாண்மைகல்லூரி

கரும்பு விவசாயிகள் சங்க தலைவர் ஏ.கே.ராஜேந்திரன்:- வேப்பந்தட்டையில் அமைந்துள்ள பருத்தி ஆராய்ச்சி மையத்திற்கு அருகிலேயே வேளாண்மை கல்லூரி அமைக்க தமிழக அரசு முன்வரவேண்டும். அதற்கு கலெக்டர் பரிந்துரைக்கவேண்டும்.

துங்கபுரம் முருகேசன்:- பெரம்பலூர் மாவட்டத்தில் அனைத்து ஏரி, குளம் போன்ற நீர்நிலைகளில் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள வீடுகள், கட்டிடங்கள், மாட்டு பட்டிகளை பாரபட்சமின்றி அகற்றவேண்டும். தமிழக அரசு எண்ணெய்பனை சாகுபடிக்கு அதிக மானியம் தருவதால், பெரம்பலூர் மாவட்டத்தில் மாற்று பயிராக எண்ணெய் பனை சாகுபடியை மாவட்ட நிர்வாகம் ஊக்குவிக்கவேண்டும். மேலும் இந்த கூட்டத்தில் பல்வேறு விவசாய சங்கங்களை சேர்ந்த பிரதிநிதிகள் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள்.

நீர்த்தேக்கம்

விவசாயிகளின் கேள்விகளுக்கு கலெக்டர் பதில் அளித்து பேசும்போது, மலையாளப்பட்டி அருகே சின்னமுட்லு பகுதியில் கல்லாற்றின் குறுக்கே நீர்¢த்தேக்கம் கட்டும் திட்டத்தை நிறைவேற்றிட அனைத்து

விவசாயிகளும் வலியுறுத்தி வருகின்றனர். புதிய நீர்த்தேக்கம் கட்டுவதால் 12 முதல் 14 குடும்பங்கள் பாதிக்கப்படும். ஆனால் 5ஆயிரம் ஏக்கர் பாசனவசதிபெறும். ஆகவே விசுவக்குடி நீர்¢த்தேக்க திட்டத்திற்கு தந்தது போல ஒத்துழைப்பு தந்தால் சின்னமுட்லு பகுதியில் நீர்¢த்தேக்கம் கட்ட அரசுக்கு பரிந்துரைக்கப்படும். வேப்பூரில் மழைமானி விரைவில் பொருத்தப்படும். பெரம்பலூரில் ஜனவரி 7-ந்தேதி முதல் ஒவ்வொரு வியாழக்கிழமையும் வடக்குமாதவி சாலையில் உள்ள வேளாண்விளைபொருள் கிட்டங்கிகளில் பருத்தி கொள்முதல் செய்து ஏலம் விடப்படும். பெரம்பலூர் பகுதியில் நெல்கொள்முதல்நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். முன்னதாக விவசாயிகள் தினத்தை ஒட்டி அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

**கீரமங்கலம் பகுதியில் நவீன எந்திரங்கள் வந்தாலும் உழவு மாடுகள் உதவியுடன் கடலையை விதைக்கும் விவசாயிகள்**



கீரமங்கலம் பகுதியில் நவீன எந்திரங்கள் வந்தாலும் உழவு மாடுகள் உதவியுடன் கடலையை விதைக்கும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். கடலைக்கு ஏற்ற பருவம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக கனமழை இல்லை என்றாலும் சராசரியாக மழை பெய்துள்ளது. அதனால் மழையின் ஈரத்தை பயன்படுத்தி கீரமங்கலம், கொடிக்கரம்பை, செரியலூர், நெய்வத்தளி, வல்லவாரி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் உள்ள விவசாயிகள் கடலை சாகுபடியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். தற்போது நடவிற்கும் களை பறிக்கவும், மருந்து தெளிக்கவும் மற்றும் அறுவடை செய்வதற்கும் என அனைத்து விவசாய வேலைகளுக்கும் நவீன எந்திரங்கள் வந்து விட்டன. ஆனால் கீரமங்கலம் பகுதியில் உள்ள விவசாயிகள் பழமை மாறாமல் உழவு மாடுகளை பயன்படுத்தி விவசாயிகள் கடலையை விதைத்து வருகின்றனர். இது குறித்து விவசாயிகள் கூறும் போது:-விவசாயத்தின் அனைத்து வேலைகளுக்கும் ஆள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதனால் நவீன எந்திரங்களின் வருகை அதிகரித்துவிட்டது உண்மை தான். முன்பு கிராமங்களில் அனைத்து வீடுகளிலும் 2, 3 ஜோடிகள் வரை உழவு மாடுகள் இருந்தது. அதிகாலை முதலே வயல்களில் வேலைகள் தொடங்கி விடும்.

ரூ.50 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரை

கடலையை விதைக்க உழவு மாடுகள் தான் சரியாக இருக்கும். ஆனால் அதற்கும் எந்திரம் வந்துவிட்டது. ஆனாலும் உழவு மாடுகளை பயன்படுத்தி விதைப்பது போல இருப்பதில்லை. அதனால் தான் இது போன்ற விவசாயங்களுக்காக கிராமங்களில் ஒரு சில வீடுகளில் மட்டும் உழவு மாடுகள் இருக்கிறது. ஒரு ஜோடி உழவு மாடுகள் சுமார் ரூ.50 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரை கொடுத்து வாங்க வேண்டியதுள்ளது. பிறகு அதனை பராமரிக்க ஒரு நாளைக்கு வைக்கோல், பருத்தி, உளுந்து உமி, தவிடு என்று சுமார் ரூ.100 வரை செலவாகிறது. இருந்தாலும் பாரம்பரியம் விட்டுப்போகாமல் இருக்க இந்த மாடுகளை வளர்க்க வேண்டியுள்ளது என்றனர்.

**ஐந்திணை மரபணு பூங்காவில் மலர் கண்காட்சி அமைச்சர் சுந்தர்ராஜன் தொடங்கி வைத்தார்**



ராமநாதபுரம்

ராமநாதபுரம் அருகே ஐந்திணை மரபணு பூங்காவில் மலர் கண்காட்சியை அமைச்சர் சுந்தர்ராஜன் தொடங்கி வைத்தார்.

முதல்முறை

ராமநாதபுரம் அருகே கிழக்கு கடற்கரை சாலையில் ஆர்.எஸ்.மடை அருகே அச்சடிபிரம்பு கிராமத்தில் உள்ள பாலை ஐந்திணை மரபணு பூங்காவில் முதன்முறையாக தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறையின் மூலம் காய்கனி, மலர் கண்காட்சி தொடங்கப்பட்டுஉள்ளது. இதன் திறப்பு விழா மாவட்ட கலெக்டர் நந்தகுமார் தலைமையில் நடந்தது. தோட்டக்கலை கண்காட்சியை அமைச்சர் சுந்தர்ராஜன் தொடங்கி வைத்தார். விழாவில் முருகன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி தலைவர் சுந்தரபாண்டியன், மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் ஜெயஜோதி, ராமநாதபுரம் யூனியன் தலைவர் சாந்திசாத்தையா, ராமநாதபுரம் நகரசபை துணைத்தலைவர் கவிதாசசிக்குமார், கீழக்கரை

நகர் அ.தி.மு.க. செயலாளர் ராஜேந்திரன், ஆர்.எஸ்.மடை ஊராட்சி தலைவர் முனீஸ்வரிரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். கண்காட்சி குறித்து அமைச்சர் சுந்தர்ராஜன் கூறியதாவது:–

தமிழகத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில் நிலங்களின் சிறப்புக்கு ஏற்ப ஐந்தினை பூங்கா அமைக்கப்பட்டுஉள்ளது, குறிஞ்சி பூங்கா சேலம் ஏற்காட்டிலும், முல்லை பூங்கா திண்டுக்கல் சிறுமலையிலும், நெய்தல் பூங்கா நாகப்பட்டினம் திருக்கடையூரிலும், மருதம் பூங்கா தஞ்சையிலும், பாலை பூங்கா ராமநாதபுரம் அச்சடிபிரம்பிலும் அமைக்கப்பட்டுஉள்ளது. இந்த பூங்காவின் மொத்த நிலபரப்பு 25 ஏக்கர். இதில் 10 ஏக்கரில் ரூ.7.35 கோடி செலவில் பூங்கா அமைக்கப்பட்டுஉள்ளது, பூங்காவிற்கு நீர் ஆதாரம் அளிக்கும் வகையில் பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த பூங்காவில் சிறுவர்களை கவரும் நோக்கத்தோடு சிறுவர் விளையாட்டு பூங்காவும் அமைக்கப்பட்டுஉள்ளது. இதன் சிறப்பு அம்சமாக நீண்ட நடை பாதைகள், குகை பாதை, பாலைவனம் போல காட்சியளிக்கும் மணல் திட்டு, சங்க கால மனிதர்களின் நாகரீகம், வாழ்வாதாரம் பற்றி விளக்கும் சிலைகள், நிழல் தரும் ஓலை குடில்கள், நீர் தடாகங்கள், தானியங்கி நீர் தெளிப்பான்கள், புல் தரை, அழகிய வண்ணமிகு மலர் செடிகள் அமைந்துள்ளன.

## 140 அலங்காரங்கள்

தற்போது ராமநாதபுரம் மாவட்டத்திலேயே முதன்முறையாக ஊட்டி, கொடைக்கானல் போல இங்கு பல்வேறு மலர்களாலும், காய்கனிகளாலும் உருவாக்கப்பட்ட அலங்கார சிற்பங்கள் அடங்கிய மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது.

இதில் பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் ரோஜா, கார்னேசன், ஜெர்பரா போன்ற பல்வேறு மலர்களால் ஆன 140 வகை அலங்காரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அரசின் எந்த திட்டமாக இருந்தாலும் அது மக்களை நல்ல முறையில் சென்றடைந்து முழு பயன் அளிக்க வேண்டும்

என்று முதல்–அமைச்சர் ஜெயலலிதா நடவடிக்கை எடுத்து வருகிறார். தோட்டக்கலை கண்காட்சி மூலம் ராமநாதபுரம் மாவட்டத்தில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. தினமும் ஆயிரக்கணக்கானோர் இந்த பூங்காவிற்கு வருவதால் சிறந்த சுற்றுலா தலமாக உருவாகி வருகிறது. மாவட்ட ஊராட்சி சார்பில் பூங்கா அருகே ரூ.5 லட்சம் செலவில் நிழற்குடை அமைக்கப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

கண்காட்சி ஏற்பாடுகளை துணை இயக்குனர் தமிழ்வேந்தன், உதவி இயக்குனர்கள் இளங்கோவன், அனுசியா, அலுவலர்கள் அழகேசன், தியாகராஜன், ஸ்ரீமீனா, புனித சுகன்யா, துணை வேளாண்மை அலுவலர் பழனிச்சாமி, உதவி வேளாண்மை அலுவலர்கள் தங்கவேலு, மதன், சாத்தையா உள்பட பலர் செய்திருந்தனர். விழாவில் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் காந்தி, உதவி அலுவலர் மகேஷ் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**சேலத்தில் குண்டுமல்லி விலை கிடுகிடு உயர்வு கிலோ ரூ.1,400-க்கு விற்பனை**



இன்று(சனிக்கிழமை) காலை நடராஜர் ஆருத்ரா தரிசன உற்சவம் நடக்கிறது. அதையொட்டி நேற்று சேலத்தில் குண்டுமல்லி கிலோ ரூ.1,400-க்குவிற்பனைஆனது.

திருவாதிரைதிருநாள்

சிவன் கோவில்களில் ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதம் திருவாதிரை திருநாள் உற்சவம் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். சேலம் சுகவனேசுவரர் கோவிலில் இந்த ஆண்டு திருவாதிரை திருநாள் (ஆருத்ரா தரிசன உற்சவம்) கடந்த 17-ந் தேதி தொடங்கியது. விழாவையொட்டி தினமும் கோவிலில் திருவெம்பாவை பாராயணம், சிறப்பு பூஜைகள் நடைபெற்றுவந்தன. விழாவின் முக்கிய நிகழ்ச்சியான நடராஜரின் ஆருத்ரா தரிசன உற்சவ நிகழ்ச்சி இன்று (சனிக்கிழமை) காலை 6.30 மணிக்கு நடக்கிறது. முன்னதாக இந்த நிகழ்ச்சியையொட்டி நேற்று பகல் 12 மணிக்கு மேல் 1 மணிக்குள் திருக்கல்யாண உற்சவம் நடந்தது. இரவு 7 மணிக்கு ரிஷப வாகனத்தில் சுவாமி வீதியுலா காட்சியும் நடக்கிறது. நள்ளிரவு 12-15 மணிக்கு நாதஸ்வர மேளத்துடன் நடராஜருக்கு சிறப்பு அபிஷேகங்கள்நடந்தது.

ஆருத்ராதரிசனம்

அதையொட்டி பால், தயிர், இளநீர், சந்தனம், பன்னீர், திரவியம், மஞ்சள், பஞ்சாமிர்தம் உள்பட 32 விதமான மங்கல பொருட்களால் நடராஜருக்கு சிறப்பு அபிஷேகங்கள் மற்றும் தீபாராதனைகள் இரவு முழுவதும் விடிய விடியநடைபெற்றது. அபிஷேகம் முடிவடைந்ததும் இன்று(சனிக்கிழமை) காலை 6-30 மணிக்கு நடராஜர் ஆருத்ரா தரிசன உற்சவ நிகழ்ச்சி நடக்கிறது. இதில் நடராஜர் உற்சவ மூர்த்திக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனைகள் நடைபெறும். தொடர்ந்து பலவண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் நடராஜர் எழுந்தருளி திருவீதி உலா நிகழ்ச்சி நடக்கிறது.

நடராஜர் ஆருத்ரா தரிசனத்தையொட்டி கோவிலில் மூலவர் சுகவனேசுவரருக்கு தங்க நாகாபரணம் அணிவிக்கப்பட்டும், தாயார் சொர்ணாம்பிகை அம்மனுக்கு தங்க கவசமும் அணிவிக்கப்பட்டு விசேஷ பூஜைகள்நடைபெறும்.

குண்டுமல்லி விலை கிடு கிடு உயர்வு

சேலத்தில் நேற்று கிறிஸ்துமஸ் பண்டிகை மற்றும் ஆருத்ரா திருக்கல்யாண உற்சவத்தையொட்டி பூக்கள் விலை கிடு கிடுவென உயர்ந்துள்ளது. சேலம் மாவட்டத்தில் வீராணம், ஜோடுகுளி, தொப்பூர், ஓமலூர், வாழப்பாடி, வெள்ளாளக்குண்டம், ஆத்தூர், தலைவாசல் பகுதியில் இருந்து குண்டுமல்லி, கனகாம்பரம், ஊசிமல்லி, அரளி, சாமந்தி, சம்பங்கி உள்ளிட்ட பூக்கள் சேலம் வ.உ.சி.மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு விவசாயிகள் கொண்டு வருகிறார்கள். இது தவிர பெங்களூர், ஓசூரில் இருந்து ரோஜாப்பூக்களும் விற்பனைக்கு வருகிறது. கிறிஸ்துமஸ், ஆருத்ரா உற்சவம் மற்றும் பவுர்ணமியையொட்டி பூக்களின் விலை கிடு, கிடுவென உயர்ந்துள்ளது. கடந்த சில தினங்களாக கிலோ ரூ.400 முதல் ரூ.500 வரை விற்பனை செய்யப்பட்ட குண்டுமல்லி நேற்று பல மடங்கு உயர்ந்து கிலோ ரூ.1,400-க்கு விற்பனை ஆனது. இதுபோல ஊசிமல்லியும் கிலோ ரூ.1000-க்கும் மேல் விற்பனை ஆனது. என்னென்ன பூக்கள் கிலோ ரூ.500-க்கு விற்ற கனகாம்பரம் ரூ.800-க்கும், ரூ.300-க்கு விற்ற ஜாதிமல்லி ரூ.600-க்கும், ரூ.400-க்கு விற்ற காக்காட்டன் பூ ரூ.600-க்கும், ரூ.100-க்கு விற்ற சம்பங்கி ரூ.150-க்கும், ரூ.70-க்கும் விற்ற சாமந்தி ரூ.200-க்கும், ரூ.25-க்கு விற்ற ஒருகட்டு கோழிகொண்டை பூ ரூ.40-க்கும் விற்பனை ஆனது. அதுபோல அரளி கிலோ ரூ.250-க்கும், ஒரு கட்டு ரோஜா ரூ.200-க்கும், ரூ.5-க்கு விற்கப்பட்ட ஒரு தாமரை பூ நேற்று ரூ.15-க்கும் விற்கப்பட்டதாக பூ வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

**பண்ணைக்குட்டை அமைத்துள்ள விவசாயிகள் மீன்குஞ்சுகளை மானியத்தில் பெற்று பயனடையலாம் வேளாண்மை இணை இயக்குனர் தகவல்**

சிவகங்கை,

மாவட்டத்தில் தங்களது நிலத்தில் பண்ணைக்குட்டை அமைத்துள்ள விவசாயிகள் 80 சதவீதம் மானியத்தில் மீன்குஞ்சுகள், பழமரக்கன்றுகள், பயிர் வகைகளை பெற்று பயனடையாலாம் என்று வேளாண்மை இணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

<u>நீர்வடிப்பகுதி திட்டம்</u>

சிவகங்கை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் குருமூர்த்தி விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

சிவகங்கை மாவட்டத்தில் வேளாண்மைத்துறை மூலம் ஒருங்கிணைந்த நீர் வடிப்பகுதி வேளாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி சிவகங்கை, இளையான்குடி, காளையார்கோவில், கல்லல், தேவகோட்டை, மானாமதுரை, திருப்புவனம் ஆகிய 7 வட்டாரங்களில் 85 நீர்வடிப்பகுதி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த குழுக்களின் தீர்மானங்களின் அடிப்படையில் அந்தந்த பகுதி விவசாயிகளுக்கு தேவையான பணிகள் தேர்வு செய்யப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

இந்த திட்டம் மூலம் ஏற்கனவே அமைக்கப்பட்ட பண்ணைக்குட்டைகளில் தற்போது பெய்த வடகிழக்கு பருவமழையினால் மழைநீர் நிரம்பி உள்ளது. இதன் மூலம் பழமரக்கன்றுகள் நடவு செய்யவும், மானாவாரி நிலங்களில் உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு பயிரிடவும் ஏதுவான சூழ்நிலை உள்ளது.

<u>80 சதவீத மானியம்</u>

இதுதவிர கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் 80 சதவீதம் மானியத்தில் பண்ணைக் குட்டை அமைத்த விவசாயிகளுக்கு மீன் குஞ்சுகள் கொடுக்கப்பட்டன. தற்போது இவைகள் நன்கு வளர்ந்து நல்ல விலைக்கு விற்கும் நிலையில் உள்ளது. இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும். எனவே சிவகங்கை மாவட்டத்தில் பட்டா

நிலங்களில் பண்ணை குட்டை அமைத்துள்ள விவசாயிகள் மீண்டும் மீன்குஞ்சுகள் பெற்று மீன் வளர்க்கவும், மா, கொய்யா போன்ற பழமரக்கன்றுகள், உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு ஆகிய பயிர்களையும் 80 சதவீத மானியத்தில் பெற்று பயனடையலாம்.

இதுகுறித்து மேலும் தகவலுக்கு அந்தந்த நீர்வடிப்பகுதி குழுத் தலைவர் அல்லது வேளாண்மை உதவி இயக்குனரை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.